Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 31 வெள்ளிக்கிழமை (15.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 208

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## விடுதலைப்புலிகள்—கடற்படை

# திருகோணமலையில் நேரடி மோதல்

### போராளி ஒருவர் வீரச்சாவு;இரு கடற்படையினர் படுகாயம்

(நமது நிருபர்)

**திருகோணமலை கும்புறுப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள ஜேர்மன் வானொலி நிலையத்திற்கு அருகில் நேற்று மாலை 6.30மணிக்கு கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நேரடிமோதல் இடம்பெற்றுள்ளது.**

**இம் மோதல் சம்பவத்தில் ஒரு போராளி வீரச்சாவடைந்துள்ளார் மற்றொருவர் காயமடைந்துள்ளார். கடற்படையினர் தரப்பில் இருவர் காயமடைந்துள்ளனர்.**

கும்புறுப்பிட்டிய பகுதியில் ஆயுதங்களுடன் வந்திறங்கிய இரு.போராளிகள் மீது கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்டதாகவும், இதனையடுத்து போராளிகளும் பதில் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இதனையடுத்து சில நிமிட நேரம் இருதரப்பினரிடையேயும் கடுமையான துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றுள்ளதாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதன்போது ஒரு போராளி உயிழந்ததாகவும் மற்றையவர் படுகாயமடைந்ததாகவும், தமது தரப்பில் இருவர் காயமடைந்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த இருகடற்படையினரும் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இச்சம்பவம் குறித்து அறிவதற்காக விடுதலைப் புலிகளின் (12ஆம் பக்கம் பார்க்க)

## உயர்மட்ட அரச பிரதிநிதியாக டி.யு.குணசேகர நியமனம்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பின் உயர்மட்ட அரசாங்க பிரதிநிதியாக அரசியல்யாப்பு விவகார அமைச்சர் டியுகுணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுக்கட்டமைப்பின் பிராந்தியக்குழுக்களின் உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை தற்போது நடைபெற்றுவருகின்றன.போச்சுவார்த்தை முடிவடைந்தவுடன் பிராந்தியக் குழுக்களின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பின் முன்னேற்றம் குறித்து அறிக்கை ஒன்று அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## செல்வநாயகபுர தாக்குதலுக்கு ஜனாதிபதி சந்திரிகா கவலை

(கொழும்பு)

திருகோணமலை செலவநாயகபுரத்தில் தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல் அலுவலகத்தில் இருந்த அரசியல் போராளிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் சம்பவம் குறித்து தான் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து திருமலையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் வன்முறைகள் மற்றும் இராணுவத்தினர் மீதான தாக்குதல் என்பவை தொடர்பாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 11ம் திகதி முதல் பாதுகாப்பு படைத்தளபதிகள் உள்ளடங்கிய தேசியப்பாதுகாப்புச் சபைக்கூட்டங்களில் நிராயுதபாணிகளான விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சமபந்தமாகவும் திருமலையில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளமை தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கு எதிராக உடன் நடவடிக்கைகளை (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்மீது திருப்பித் தாக்க இராணுவத்தினருக்கு உத்தரவு

### இராணுவத்தளபதி பிறப்பித்தார்

(கொழும்பு)

இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளினால் தாக்குதல் நடத்தப்பட்டால் அவர்களின் மீது திருப்பித்தாக்குவதற்கு இராணுவத்தினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.அதற்கான உத்தரவை இராணுவத்தளபதி சாந்தகொட்டேகொட பிறப்பித்தார். கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோரினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல் சம்பவங்கள் குறித்து இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றிய இராணுவத்தளபதி இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராணுவத்தினர் மீதான தாக்குதல்சம்பவங்கள் அதிகரித்துவருகின்ற இந்நிலையில் இனியும் பொறுமைகாக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தும் விடுதலைப் புலிகள்மீது திருப்பித் தாக்க உத்தரவு வழங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.(ச-4)

## புலிகளுக்கு பாதுகாப்பு வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது

டேகொட பிறப்பித்தார். கிழக்கு கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. வதாக அவர் தெரிவித்துள்ளார்.(ச-4)

## பொதுக்கட்டமைப்பில்
# முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைகோரி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவத்தை பெற்றுத்தருமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

கல்முனை அக்கரைப்பற்று பிரதேசங்களைச் சேர்ந்த இருவர் இம் மனுவைத்தாக்கல் செய்துள்ளனர். இம் மனுவில் நிவாரண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர், அமைச்சின் செயலாளர், புலிகளின் திட்டமிடல் செயலக பிரதிப்பணிப்பாளர் சண்முகலிங்கம் ரஞ்சன், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சுனாமிக்குப்பின்னரான நடவடிக்கைமுகாமைத்துவ கட்டமைப்பின் வலயசபைகளை நியமிப்பதை தடுப்பதற்கு இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றையும் அதேபோல் சமமான முஸ்லிம் பிரதிநிதித்துவம் கட்டமைப்பில் சேர்த்துக்கொள்ளும் விதத்திலும் உத்தரவு பிறப்பிக்குமாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய உட்பட பலமுக்கிய கட்சிகளும் தேர்களும் மனுத்தாக் கல்செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

# பொலிஸ் அதிகாரிமீது நேற்று துப்பாக்கிச்சூடு

(திருகோணமலை)

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் அதிகாரி ரஞ்சித்லொக்கு ஹெட்டிகே மீது இனந்தெரியாத குழுவினரால் துப்பாக்கிச் சூடுநடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 8.45 மணிக்கு தனது உடற்பயிற்சியை முடித்து விட்டு பணிக்கு அவர் சென்று கொண்டிருந்தபோது தம்பலகாமம் பொக்குருனி என்ற இடத்தில் இத்தாக்குதல் சம்பவம் நடாத்தப்பட்டது.

இத்துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த ரஞ்சித்லொக்கு ஹெட்டிகே முதலில் கந்தளாய் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் தம்புள்ள பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சகல பாதுகாப்புக்களையும் வழங்க அரசு தயாராக இருக்கின்றது.

அதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன என அரசாங்கத்தின் பேச்சாளரும் சுகாதாரத்துறை அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புலிகளுக்கு முழுமையான பாதுகாப்பான வழித்துணையினை வழங்கவும் அரசு தொடர்ந்தும் தயாராகவே (12ஆம் பக்கம் பார்க்க)

# மீசாலை காவலரண் மீது நேற்றிரவு கைக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

மீசாலைச் சந்தியில் அமைந்துள்ள இராணுவக் காவலரணுக்கு நேற்றிரவு 10 மணியளவில் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

எனினும் அக்குண்டு வெடிக்காததினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. உடனடியாக சம்பவஇடத்திற்கு விரைந்த குண்டு செயலிழக்கும் பிரிவினர் அதனை செயலிழக்கச் செய்தனர்.

இதனையடுத்து அப்பகுதி எங்கும் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்ததுடன் சந்தேகத்திற்கிடமானவர்களை இராணுவத்தினர் சோதனை செய்தனர்.(ச-8)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆன்மீக வழிபாட்டில் உயர்ந்தது தியானம்

கடவுளின் கடாட்சம் வேண்டி மக்கள் தினமும் மாறி மாறிப் பல்வேறு கோவில்களுக்கும்



செல்கின்றார்கள். இறைவழிபாடு செய்வதற்கும், இறையருள் வேண்டியும் கோவில்களுக்குச் செல்லும் மக்கள் மன அமைதி யின்றி பல்வேறு மதச் சடங்கு களிலும், விழாக்களிலும் பங்கு பற்றி பொழுதைக் கழிப்பவர்க ளாயிருக்கின்றனரேயன்றி அமைதியாகப் பொறுமையான தியான வழிபாட்டில் ஈடுபடுவ தில்லை.

மனதில் அமைதியோ, பொறு மையோ இல்லாது தினமும் கோவில்கட்கு வழிபாடு செய்யப் போவதிலும் ஓரிடத்தில் மனத்தை ஒருமைப்படுத்தித் தியானம் செய்து இறைவழிபாடு நடாத்து வதே மனதிற்குத் திருப்தியும், அமைதியும் தரவல்லதாகும்.

தியானத்தின் மூலம் வழி பாடு செய்வதனாற்றான் அமைதி ஏற்படுகின்றது. தியான வழிபாட் டிற்குக் கோவிலுக்கோ அல்லது வேறு எந்த ஒரு வழிபாட்டு இடங் கட்கோதான் செல்லவேண்டும் என்பதில்லை. எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் ஓரிடத்தில் தனித்திருந்தவாறே இறைதி யானம் செய்யலாம்.

## வெள்ளிநற்சிந்தனை

கூட்டுப் பிரார்த்தனைகள், கூட்டுவழிபாடுகள் செய்பவர்கள் கோவிலிற் சென்றுதான் செய்ய வேண்டும் என்பதில்லை, வீட்டில் உள்ள பூசை அறைகளிலோ பாடசாலைகள், தொழில் நிலை யங்கள, பொதுஸ்தாபனங்களில் அமைத்திருக்கும் சுவாமி படங் கள், சமயச்சின்னங்கள் என்ப வற்றின் முன்னாக நின்றோ, அல் லது இருந்தோ தியானம் செய்ய லாம்.

அமைதியான, ஒழுங்கான தியான வழிபாட்டின் மூலம், தமக்கும், பிறர்க்கும் இறையுணர் வைப் பெருக்கிக் கொள்ளவும். உடம்பையும், உள்ளத்தையும் ஓம்பி ஒரு நிலைப்படுத்தி வாழ வும் முடியும். கடவுளைத் தேடி எங்கெங்கெல்லாமோ அலையும் மக்கள் தம்மனதை ஓரிடத்திலி ருந்தே தியானம் செய்வதற்குப் பழக்கிக் கொண்டால், கடவுள் அவர்கள் இருக்குமிடத்திற்கே தேடிவருவார் என்பதில் ஐய மில்லை.

ஊக்கத்தினாலும், விடா முயற்சியினாலும் உயர்ந்த பெரியோர் பலர் தினசரி தியான வழிபாட்டினாலேயே தம்மை வழிபடுத்துவோராயுள்ளனர். தியான வழிபாட்டின் சிறப்பானது "சும்மா இருந்து சுகம் பெறல்" என்பர் ஆன்ம ஞானிகள். சும்மா இருத்தல் என்பது சாதாரண மனி தருக்கு இலகுவரன காரியமல்ல. மனதை ஒருமுகப்படுத்தி இறை வன் பால் இருத்தி இறை சிந் தனையன்றி வேறெதுவும் கொள் ளாமல் அமைதியாகச் சும்மா இருந்தால் கிடைக்கும் சுகம்தான் நிலையானதாகும்.

தியானவழிபாட்டின் சிறப்பை உணர்ந்தேதான் ஆன்மீகவாதி கள் இன்றைய இளஞ் சமுதா யத்தினருக்கும் தெய்வீக நம் பிக்கை உடையவர்கட்கும் "தியானப் பயிற்சி வகுப்புக்களை யும், வழிபாடுகளையும் ஆங்காங் கே அறிமுகஞ்செய்து நடாத்தி வருகின்றனர்.

இந்தத் தியான சிந்தை இறை வழிபாட்டின் ஒன்றுபட்ட நிலை யானது அதி உயர்ந்த நிலை யாகும்.

"சும்மா இரு சொல்லற என்றதுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"

எனவரும் ஈரடிகளும் தியா னத்தின் மூலம் மனம் இறைவ னுடன் ஒன்றுபட்ட நிலையில் வேறொன்றும் அறியாது தெய் வீக நிலையடைந்து விடும் என் பதையே உறுதிப்படுத்துவதா யுள்ளது.

இன்றைய சமுதாயத்தினரும் கடவுளைத் தேடி எங்கும் அலை யாமல் தம் மனத்தை ஒரு மைப்படுத்தித் தியானம் செய்து வருவது நல்ல ஆன்மீகப் பயிற்சி யும் மன நிறைவும் கிடைக்க வழிவகுக்கும் எனலாம். □

நீர்வைமணி

## புகையிரத கடவைகளுக்கு மின்சார சமிக்ஞை!

(கொழும்பு)

பாதுகாப்பற்ற புகையிரத கட வைகளுக்குப் பாதுகாப்புக் கதவு கள் அல்லது மின்சார சமிக்ஞைக் கட்டமைப்பைப் பொருத்தத் திட்ட மிட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரி வித்துள்ளார்.

நாட்டில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளுக்கு பாது காப்புக் கதவுகள் அல்லது மின் சார சமிக்ஞைக் கட்டமைப்பை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படு மென்று அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார்.

இதற்காக 750 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாகவும் இந்த வேலைத்திட்டம் பல்வேறு கட் டங்களாக மேற்கொள்ளத் திட்ட மிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.(க-9)

## அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்கள்

(தென்மராட்சி)

நுணாவில், மட்டுவில், சாவகச் சேரி மற்றும் தச்சன்தோப்புப் பகுதி களில் திருட்டுச் சம்பவங்கள் நாளாந் தம் அதிகரித்து வருவதாகத் தெரிய வருகின்றது.

இச் சம்பவங்களின் போது பணம், தங்க நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களும் திருட்டுப் போயுள்ளதாக அறியப் படுகின்றது.

இத்தகைய திருட்டுச் சம்பவங் களைக் கட்டுப்படுத்த எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்படா மல் இருப்பது குறித்து இப்பகுதி களைச் சேர்ந்த பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.(க-16)

## மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்காதேவி யின் வருடாந்த மஹோற்சவ விழா எதிர்வரும் 26 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் விழா இடம்பெறவுள்ளது.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசைத் தினமன்று தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் 5ஆம் திகதி மாலை 4.00 மணிக்குப் பூங்காவ னமும் இடம்பெறவுள்ளன. (க-21)

## ஆன்மீகக் கலை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதி யான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மானிப்பாய் மரு தடி விநாயகர் ஆலய் அறநெறிப் பாடசாலை மாணவர்களினது இயல், இசை போன்ற ஆன்மீகக் கலை நிகழ்வுகள் நடைபெறவுள் ளன.

பேரவைத் தலைவர் க.அருள் லிங்கம் நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார். சமூகஜோதி கா.கணேச தாஸன் ஆரம்ப சிறப்புரையாற்ற வுள்ளார்.

ஆச்சிரம இயக்குநர் அமுத கலாஜோதி செ.மோகனதாஸ் சுவாமிகளின் பூசை வழிபாட்டுடன் மகேஸ்வர பூசையும் நடைபெற வுள்ளது. (ற)

## இராசி பலன்

15.07.2005
(ஆனி 31, வெள்ளிக்கிழமை)
நவமி பின்னிரவு 4.07 மணிவரை
சித்திரை முற்பகல் 8.43 மணிவரை
இராகுகாலம் 10.30 - 12.00 மணிவரை
சுபநேரம் 6.00 -7.30 மணிவரை

- **மேடம்**: களஸ்திர நன்மை, சென்ற இடத்தில் செல் வாக்கு, காரிய அனுகூலம், பொருள்சேர்க்கை.
- **இடபம்**: மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், தேக நலன், உறவினர் சந்திப்பு.
- **மிதுனம்**: வியாபார நன்மை, முயற்சி தாமதம், கௌர வக்குறைவு, அஜீரணரோகம்.
- **கடகம்**: தாய்வழி உறவு, மனக்கிலேசம், காரிய தாமதம், பணக்குறைவு.
- **சிங்கம்**: புதிய முயற்சி, சகோதரர் உதவி, போசன சுகம், நல்ல செய்தி.
- **கன்னி**: கடின வார்த்தை, பண விரயம், காரிய தாம தம், தெய்வசிந்தை.
- **துலாம்**: வெகுமானம், தெய்வ தரிசனம், நண்பிகள் சந்திப்பு, முயற்சி கைகூடும்.
- **விருச்சிகம்**: சோம்பல் நிலை, தனவிரயம், காரிய தாம தம், சுபசெலவு.
- **தனுசு**: நண்பிகள் சந்திப்பு தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை.
- **மகரம்**: பிரபுத் தனம், பீடசித்தி, போசன சுகம், மனமகிழ்ச்சி.
- **கும்பம்**: எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு, காரிய தாமதம், பிரயாணம்.
- **மீனம்**: வாகன பயம், வீண் பகை, காரிய தாமதம், பிறருக்கு உதவுதல்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## டெங்கு அபாயம் நீங்கியுள்ளது

(கொழும்பு)

நாடடில் கடந்த 6 மாத காலங்களுக்குள் டெங்கு நோயின தாக்கம் காரணமாக 14 பேர் உயிரிழந்துள்ள தாக சுகாதார அமைச்சின் டெஙகு ஒழிப்புப் பிரிவு தெரி விக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் 1840 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை பதிவு செய்யப் பட்டுள்ளது.

கடந்த 6 மாத காலத்திற்குள் கொழும்பு மாவட் டத்தில மாத்திரம் 670 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவிக் கின்றது. உயிரிழந்தோரில் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 4 பேரும், கம்பகா மாவட்டத்தைச் சேர்ந்த 3 பேரும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாகக் கண்டி மாவட்டத்தில் 161 நோயாளர்கள் பதிவாகியுள்ளதோடு அவர்களில் 3 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இவ்வாண்டில் பதிவாகியுள்ள டெங்கு நோயின் தாக்கம் கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் 60 வீத் வீழ்ச்சியாகும் என்று சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவின் தேசிய இணைப்பாளர் டாக்டர் லக் சுமி டி சில்வா தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தந் தப்பிரிவுகளை அறிவுறுத்தும் திட்டத்தை டெங்கு நோய்ப் பிரிவு ஆரம்பித்துள்ளது. (க-9)

## சுற்றாடல் வள அதிகாரிகள் பற்றாக்குறையால் பாதிப்பு!

(கொழும்பு)

நாட்டின் சில பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் சுற்றாடல் அதிகாரிகள் குறைபாட்டினால் நெருக்கடியானநிலை தோன்றியுள்ளது என சுற்றாடல் இயற்கை வள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரி வித்துள்ளார்.

சுற்றாடல் அதிகாரிகள் குறைபாட்டினால், சுற் றாடல் பிரச்சினை தொடர்பாக பிரதேச செயலக அதி காரிகளுக்கு அறிவுறுத்துவதற்கும் சுற்றாடலை பாது காப்பதற்குமான திட்டங்களை மேற்கொள்வதற்கு முடியாமல் இருக்கின்றது. இது வடக்கு-கிழக்குப் பகுதிகளைப் பெரிதும் பாதித்திருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வெற்றிடங்கள் நிலவும் சகல பிரதேச செய லகப் பிரிவுகளுக்கும் ஒவ்வொரு சுற்றாடல் அதிகாரி களை நியமிக்க சுற்றாடல் இயற்கை வள அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இந்த வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் இணைத் துக் கொள்ளப்படவுள்ளனர். தமிழ்மொழி தெரிந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இதேவேளை, சுனாமியால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு அவற்றை மீள் அமைப்பதற்குப் பல்வேறு யோச னைகள் அடங்கிய திட்டத்தை முன்வைத்துள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 318 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது. அந்த நிதி ஐக்கிய நாடுகள் சுற்றாடல் வேலைத்திட்டத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படுமென அமைச்சர் பௌஸி மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் சம்பந்தமான பேச்சுக்கள் தற்சமயம் இடம்பெற்று வருவதாக வர்த்தகத் திணைக் களப் பிரதிப்பணிப்பாளர் நிமால் கருணாதிலக தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி, அபிவிருத்தி, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வரி விதிப்பு உட்படப் பல விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன.

அதேசமயத்தில் கணனி, கல்வி, கடற்பிரயாணமாகிய துறை களில் சேவைகளைப் பரஸ்பரமா கப் பரிமாறிக்கொள்வதன் சாத்தி யம் பற்றியும் ஆராயப்படும்.

இவற்றின் அடிப்படையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான விரி வான பொருளாதார உடன்படிக் கையாக அமையுமென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருட இறுதியளவில் ஒப் பந்தம் கைச்சாத்திடப்படும். தக வல் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தகவல்கள் பிரதிப் பணிப்பாளரி னால் வெளியிடப்பட்டுள்ளன.(க-2)


## உடன் விற்பனைக்கு உண்டு

பின்வரும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு

- ஒவ்செற் பிரேற் (பாவித்தது)
- ஈய எழுத்துக்கள் மற்றும் ஈய லெற்றுகள் (புதியது)
- புத்தகம், கொப்பி என்பவற்றிற்கு கீளிப்பிடும் மெசின் (அச்சகங் களுக்குரியது, சிறிய திருத்தம் உண்டு)
- சிறிய ஜெனறேற்றர்
- ஈய எழுத்துக்கள் வைக்கப்படும் கேஸ் (பலகையினாலானது)
- கோழிக்கூடுகள் மற்றும் கதிரைகளுக்கான பாலைத்தடிகள்
- வெற்றுப் பைவர்கள் (6 லீற்றர்)

மலிவான விலையில் வழங்கப்படும். பார்வையிடும் நேரம் தினசரி மாலை 4.00 மணிக்குப் பின்னர்.

தொடர்பு:-
விற்பனை முகாமையாளர்
வலம்புரி
இல 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(நிராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்)



# அகில இலங்கை இந்துமாமன்றப் பொன்விழாவையொட்டி

## அகில இலங்கை இந்துமாமன்றமும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடத்தும்

# இந்து மாநாடு

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச்செய்தி



அகில இலங்கை அந்து மாமன்றத்தின் 50ஆவது ஆண்டு பொன்விழாவையொட்டி யாழ்ப்பாணத்தில் தேசியக் கல்வியியற் கல்லூரியுடன் இணைந்து இந்து மாநாடு ஒன்றை நடாத்துவதை இட்டு மகிழ்ச்சியடைகின்றோம். ஈழத்து இந்துசமய வரலாறு எனும் கருப் பொருளை மையமாகக் கொண்டு மூன்று நாட் களுக்கு பல சிந்தனையான கருத்துக்களை வெளிப்படுத்து முகமாக மாநாடு அமைந்திருப்பது இந்து சமய மக்களுக்கு மன நிறைவைத் தருகின்றது. இந்து சமய மக் களின் குரலாக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கொழும்பு நகரை தலைமைப்பீடமாகக் கொண்ட இந்து மாமன்றம் இன்று இலங்கை முழுவதிலும் உள்ள அனைத்து இந்துக்களையும் ஒன்றி ணைத்து பல சிந்தனை யான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது மகிழ்ச் சியைத் தருகின்றது. இந்த வகையில் இந்த மாநாடு யாழ்ப் பாண மக்களுக்கு தனித்துவமான சிறப்பைக் கொண்டுள் ளது. இம் மாநாட்டை நடாத்தும் தேசியக்கல்வியியற் கல்லூரி இன்று கல்விச் சமூகத்திற்கு நிறைவான பணியை வழங்கிக் கொண்டு இருக்கும் இந்த நேரத்தில் மாநாடு நடைபெறுவது கல்வி வளர்ச்சிக்கு மேலும் பயனுள்ளதாக அமைகின்றது. இம் மாநாட்டில் அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறுவோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

## சிவத்தமிழ் அன்னையின் வாழ்த்துச் செய்தி



மேற்படி கல்வியியற் கல்லூரியுடன் இணைந்து அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்த இருக்கும் இந்து மாநாடு இலங்கையில் இந்து சமயம் என் பதைத் தொனிப் பொருளாகக் கொண்டது. இந்து என்ற சொல் தெய்வீகத்தோடு இணைந்து வழங் கும் ஒரு சொல்லாகும். மொகஞ்சதாரோ, கரப்பா காலத்திலேயே இந்தியாவில் இந்து மதம் பரவியிருந் தது. தொடர்ந்து எல்லாளன் போன்ற தமிழ் மன் னர்கள் இம் மதத்தை ஆதரித்து வந்தனர். அன்பு, சகிப்புத்தன்மை, தெய்வீகம் என்பவற்றை தன்னகத்தே இணைத்துக் கொண்டது இந்து மதமாகும். இம் மதத்தின் பூர்வீகத்தை இலங்கையில் நோக்கும் பொழுது கோணேஸ்வரம், திருக்கேதீஸ் வரம் என்ற தேவாரம் பெற்ற திருத்தலங்கள் சான்றாக அமைகின்றன. இராமாயண காலத்தில் இராவணனுடைய ஆட்சியும், அவனுடைய பெருமையும் கோணேஸ்வரத் தேவாரத்தில் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இராவணன் மனைவி மண்டோதரிக்கு பேரருள் இன் பமளித்த பெருமான் என்று திருக்கேதீஸ்வரப் பெருமான் குறிப்பிடப்படுகிறார். இத்தகைய வரலாற்றுப் பழமைமிக்க சிவத்தலங்களைத் தன்னகத்தே கொண்ட ஈழத் திரு நாடாகும். யாழ்ப்பாணத்திலும் நயினாதீவு, கீரிமலை, மாவிட்டபுரம், நல்லூர் என்பன வரலாற்றுச் சிறப்புக் காட்டி நிற்கின்றன.

ஆகவே, யாழ். குடாநாட்டில் இந்து மாநாடு ஒன்று 15.07.2005இல் ஆரம்பமாக இருப்பது குறித்து நாம் பேருவகை அடைகின்றோம். அத்துடன் மாநாட்டைச் சிறந்த முறையில் நடாத்துவதற்கு முன்னின்று உதவும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியையும் அகில இலங்கை இந்து மாமன்றத்தையும் மனம், மொழி, மெய்களால் வாழ்த்தி அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி ஜே.பி.
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை.

## மாமன்றத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

பொன்விழாக் காணும் அகில இலங்கை இந்துமாமன்றம் யாழ்ப் பாணத்தில் சமயப்பணிகளும், சமூகப்பணிகளும் ஆரம்பித்திருப்பதுடன் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிவூர்வமான இந்து மாநாட்டினை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியுடன் இணைந்து நடாத்துகிறது. தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்திருக்கும் பேரா சிரியர் சோ.ந. கந்தசாமி இதில் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகமும், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இந்து அறிஞர்களும் இம் மாநாட்டில் தங்கள் அனுபவ ரீதியான அறிவினைப் பகிர்ந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

இம் மாநாட்டில் பங்குபற்றுபவர்களுள் பெரும்பாலனவர்கள் இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் ஆசிரியர் பயிற்சி பெறுகின்ற மாணவர்களாவர். இம்மாநாட்டின் பயனாக அவர்கள் பெறுகின்ற அறிவு இலங்கையின் பல பாகங்களையும் சென்றடையும் என்பதுடன், சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள் எதிர்கால சந்ததியினருக்கும் பயனுள்ள ஒரு பொக்கிச மாகவும் அமையும். இந்துமாநாடு சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் மாமன்றத்தின் சார்பில் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி
வீ. கயிலாசபிள்ளை
தலைவர் அகில இலங்கை இந்துமன்றம்

(C/1481)

## மனமார்ந்த நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக



சைவ சமயத்திற்கும் சைவத்திற்கும் பெரும் தொண்டாற்றி கடந்த ஐம்பது ஆண்டுகள் சேவை செய்து பொன் விழாக் காணும் அகில இலங்கை இந்து மாமன்றம் இம்முறை தனது விழாவினை யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல் லூரியுடன் இணைந்து நடைபெற வுள்ள இந்து மாநாடு வெகு சிறப்பாக நடைபெறவுள் ளது. தமிழ் மக்களுக்கென தனித்து சேவை செய்து வரும் இந்து மாமன்றம் சைவ சமயத்திற்கும் வைச மக்களுக்கும் ஆற்றி வரும் தொண்டுகள் போற்றப்பட வேண்டும். குறிப்பாக மாணவ உலகத்திற்கு வேண்டிய அறி வுரைகள், கலை, கலாசாரம், பண்பாடு போன்ற பல ஆக்கத் தொகுப்புகளை மாணவர் மத்தியல் வெளியிடப் படுவதும் மிகவும் பெருமைக்குரிய ஓர் விடயமாகும். மேலும் ஆன்மீக வளர்ச்சிகளுக்கான பல ஆய்வுகளையும் மாணவர் உள்ளத்தில் சிறுவயதில் பதிய வைக்கும் நோக்கில் மாணவர்கள் சமயப் பற்றுடன் வளர்ந்தால் அவர்களுடைய வாழ்நாட்கள் சிறப்பாக அமையும் என் பதில் ஐயமில்லை. எனவே இவ்விழா சிறப்பாக நடை பெற எல்லாம் வல்ல தில்லைக் கூத்தர் திருவடிகளை பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சுபம்
சிவஸ்ரீ. ச. மஹேஸ்வரக் குருக்கள்
சர்வதேச இந்து மத குருபீடாதிபதி

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



உலகளாவிய ரீதியில் இந்து மதம் உயர்ந்து வாழும் மதமாக மிளிர்கின்றது. இவ்வகையில் அகில இலங்கை இந்து மாமன் றம் தனது பொன்விழாவை யொட்டி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியுடன் இணை ந்து இந்து மாநாட்டை நடாத்த இறையருள் கிடைத்துள்ளது. இம்மாநாட்டின் தொனிப் பொருள் 'இலங்கையில் இந்துமதம்' என்பதாகும். இது வழிபாட்டு நோக்கில், வாழ்வியல் நோக்கில், வரலாற்று நோக்கில், மெய்யியல்-விஞ்ஞானம் நோக்கில், கலை-கல்வியியல் நோக்கில் என்ற வகையில் பரிணமிக்கின்றது.

இந்துமதம் மனிதர்களை மனிதத்துவம் பொதிந்த வர்களாக வாழ வழிகாட்டுகின்றது. அறிவியல் ரீதியான தத்துவார்த்த வழிகாட்டல்களை இயம்புகின்றது. கலா சார ரீதியாகவும், தமிழ்மொழி சமய ரீதியாகவும், பண் பாட்டியல் ரீதியாகவும், ஈழத்தமிழர்களை உலகளாவிய ரீதியில் இந்து மதம் இணைத்து வைத்திருக்கின்றது. இவ் இணைப்புக்கு மேலதிக உத்வேகத்தையும், அறி வியல் தளத்தையும், ஆன்மீக பலத்தையும் இம்மாநாடு வழங்குவதுடன் இன்று இந்துமதம் எதிர்நோக்கும் பல சவால்களுக்கும் விடைகாணும் என்பது எமது நம்பிக்கை.

இம்மாநாட்டில் இந்துமத அறிவியலாளர்கள், சமூக சேவையாளர்கள், யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப் பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் ஒன்றிணைவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஆர்வலர்கள் அனைவரை யும் வருக வருகவென வரவேற்கிறேன்.

இலங்கையில் வாழும் இந்துக்களின் இன்றைய சமு தாய வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஏற்ற கருத்து இயல் களை ஆய்வுரீதியாக புதிய பரிமாணத்தில் வழங்கும் எமது நோக்கு ஆசிரியர்களுக்கும் இளம் மாணவர்களுக் கும் பெரும் பயன்பாடுகளை வழங்கும். மேலும் இந்து மதம் சார்ந்த ஓர் ஆய்வியல் கலாசாரத்திற்கு இம் மாநாடு அடிப்படைத் தேர்ச்சிகளையும் வழங்கவுள்ளது. இவ்வாறான பல சிறப்புக்களைக் கொண்ட இம்மாநாடு சிறப்புற இறையருள் துணை நிற்பதாக.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக
உலகமெல்லாம்"

கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
இணைப்பாளர், பீடாதிபதி
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

## அருட்கவியின் ஆசி



அளவிலா அளவாகி அம்பலத்தில்
ஆடுகின்ற பரம்பொருள் வாய்
மலர்ந்த தெய்வ
ஒளிபரப்பும் வேதங்கள்
ஆகமங்கள்
ஓதுபுராணங்கதிரு முறைகள்
சொல்லும்
தெளிவதனை உலகெலாம் செறி
யவைக்கும்
திகழ் உலக இந்துமா மன்றத்தாரின்
உளமகிழும் ஐம்பதாம் ஆண்டுப் பூர்த்தி
உயர்விழா ம்லைவிளக்காய் வாழி வாழி

இன்பநலம் புரி அகில இலங்கை இந்து
எழில் மன்றம் செயும் பணியால் சைவமக்கள்
பொன்பெருகி சுகம் பெருகி புனிதநீற்றுப்
புகழ் பெருகி ஐந்தெழுத்தின் ஞானம் பொங்கி
அன்புநெறி அகிம்சைநெறி பெருகி வாழ்வில்
அருள்பெருகி ஐம்பாருண் உயர்வு பெற்றார்
மின்பொலிசெஞ் சடையானின் அருளால் இன்னும்
மேருவெனப் பணியாற்றி மன்றம் வாழி

வளங்காட்டும் நல்லகில இலங்கை இந்து
மாமன்றம் யாழ் தேசியக் கலைக்கல்லூரி
உளங்காட்டும் ஒருமித்துத் தரும் மாநாடு
உணர்வுடைய தமிழ் மக்கள் மனஞ்செழிக்க
தளங்காட்டும் சமயதத்துவங்கள் ஓங்க
தவங்காட்டும் சாத்வீக வாழ்வு பொங்க
இளங்கோட்டு மதியழகன் கருணையாலே
எல்லோர்க்கும் வழிகாட்டி வாழிவாழி

அருட்கவி
விநாசித்தம்பி M.A

## வளரட்டும் எம் பணிகள்

இந்நாட்டு இந்து மக்களின் உச்ச நிறுவனமாக இந்து நிறுவனங்களினதும் இந்து ஆலய அறக்கட்ட ளைகளினதும் கூட்டமைப்பாக -50 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட அகில இலங்கை இந்துமாமன்றத் தின் பொன்விழா ஆண்டு இது. கடந்த இரு தசாப் தங் களுக்கு மேலாக சொல்லொண்ணா வேதனைகளுக் கும் சோதனைகளுக்கும் ஈடுகொடுத்து வாழ்ந்து வரும் எமது மக்களுக்கு எம்மாலான பணிகளை ஆற்றி வரு வதில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டு வருகிறோம்.

வெளிநாடுகளில் இருந்து பெரும் நிதிஉதவி பெறும் ஓர் அரச சார்பற்ற நிறுவனத்தின் நிலையில் நாங்கள் இல்லை. இருந்தும் எமது ஆற்றலுக்கு ஏற்ப -சில சமயங்களில் அதற்கப்பால் கூட முடியும் மட்டும் எம்மாலா னதை செய்திருக்கின்றோம்- செய்து கொண்டிருக்கி றோம்-செய்து வருவோம் என்பதனை அடக்கத்துடன் கூறி வைப்பதல் நிம்மதி காண்கின் றோம்.

யுத்த அனர்த்தங்களினால், வெள்ளம், கடற் கோள் போன்ற இயற்கை சீற்றங்களினால் எமது மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை ஓரளவேனும் குறைப்ப தற்கு எம்மாலான நிவாரணப்பணிகளை மேற்கொண் டோம்- தொடர்ந்தும் செய்து வருகிறோம். வசதி அற்ற இளம் பிள்ளைகளுக்கும், முதியோருக்கும் விடு திகளில் ஆத ரவு நல்கி வருகிறோம். ஆன்மீகக் கருத் தரங்குகள், கல்விக் கருத்தரங்குகள், எமது மக்களை வழிநடத்த வல்ல பிரசுரங்கள், மக்களுக்கு சேவை யாற்றும் சிவ தொண்டர் அணி முதலியவை எமது சேவைகளில் குறிப் பிடற்பாலது.

பொன்விழா ஆண்டிலும் மக்களுக்கு பயன்தர வல்ல பணிகளை ஆற்றுவதுடன் அவை எதிர்காலத் திலும் தொடர்ந்தும் எமது மக்களுக்கு உதவும் வகையில் அமையவேண்டும் என விரும்புகிறோம். அந்த வகையில் பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதிய "இலங்கையில் இந்து சமயம்" முதலாம் பகுதி பொன் விழா வெளியீடாக வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வெளியி லும் இருக்கின்ற அறிஞர்களின் அறிவையும், அனுபவத் தையும் பொக்கிசப்படுத்தி எதிர்கால சந்ததிக்கு உத வும் வகையில் யூலை 15, 16, 17ஆம் திகதிகளில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் இந்துமாநாடு நடத்தப்படு கின்றது. அதேபோன்று கிழக்கிலும் மலையகத்திலும் கொழும்பிலும் இந்து மாநாடுகள் நடத்தப்பட்டு அம் மாநாடுகளில் வாசிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைகளை ஒரு பொன்விழா தொகுப்பாக வெளியிட இருக்கின்றோம்.

மனிதநேயத்தின் உதவியுடன் யாழ். மக்களுக்கு ஓர் அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்க இருக்கின்றோம். நல் லூரில் திருமதி பேரம்பலம் அம்மா நன்கொடையாகத் தந்த காணியில் ஒரு சமய பிரசாரகர் பயிற்சி நிலையமும் ஆராய்ச்சி நிலையமும் அமையக்கூடிய கட்டடம் ஒன்றைக் கட்ட ஆரம்பித்திருக்கிறோம். கிழக்கில் "சுவாமி விபுலானந்தர் வயோதிப இல்லம்" அமைக்க உதவி இருக்கிறோம். இப்போது அங்கே சுனாமியால் பாதிக் கப்பட்ட பிள்ளைகளுக்கு ஜோர்ஜ் ஸ்ருவட் கம்பனியின் ஆதரவுடன் ஒரு விடுதி அமைக்க ஒழுங்கு செய்து வருகிறோம். மன்னாரில் பல பணிகளை ஆரம்பித்திருக்கிறோம். மலையகத்திலும் எமது பணி தொடர்கிறது.

போர் அனர்த்தங்களினால் எங்கள் மக்கள் துயருற்றிருந்த வேளையிலே அவர்களது இன்னல்களை இந்த நாட்டில் இருக்கின்ற அனைவருக்கும் மட்டுமல்ல, பாரெல்லாம் எடுத்துக்கூறி அகில இலங்கை இந்துமாமன்றம் இலங்கை இந்து மக்களின் குரலாக ஒலிக்க தவறவில்லை என்பதையும் குறிப்பிடவேண்டும். தயங்காமல் எங்கள் மக்களுக்காக என்றும் குரல் கொடுத்துக் கொண்டே இருப்போம். எமது பொன்விழா ஆண்டிலும் மேலும் பல பணிகளையும் மக்களுக்கு ஆற்றி "மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை" என்பதனை மறவாது அவ்வழி நின்று இறைபணியாற்றுகிறோம். எங் கள் இலட்சியமான 'இறைபணி நிற்க' என்பதனை மறவாது அந்த வழியில் நின்று நாங்கள் தொண்டாற்றுவோம்.

கந்தையா நீலகண்டன்
பொதுச்செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்.

அனுசரணை:- துரையப்பா பத்தர் & சன்ஸ்- யாழ்ப்பாணம்
சுந்தர்சன் - மானிப்பாய்
G. குறூப் ஒப்பந்தகாரர் யாழ்ப்பாணம்

# இன்று ஒரு தகவல்

## நம்பிக்கை

காசி ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் காசி விஸ்வநாதன், இறைவி காசி விசாலாட்சி. ஒருநாள் அவர்கள் இருவரும் அமர்ந்து ஆன்மக விஷயங்கள் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது காசி விஸ்வநாதர், "இந்த மனிதர்களை நாம் மிகவும் நம்பிக்கையுடன் தான் படைத்திருக்கிறோம். இருந்தாலும் அவர்களுக்குத் தான் போதிய நம்பிக்கை இல்லை. எதிலும் ஓர் உண்மையான நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!" என்றார்.

அதைக் கேட்டதும் ஜகன்மாதாவாகிய விசாலாட்சி "என்ன அப்படி சொல்கிறீர்கள்? அதோ பாருங்கள்... எவ்வளவு பேர் காசியைத் தேடிவந்து கங்கையில் நீராடிக் கொண்டிருக்கிறார்கள்! அவர்களுக்கெல்லாம் நம்பிக்கை இல்லாவிட்டால் இவ்வளவு தூரம் காசியைத் தேடிக் கொண்டு இங்கே வருவார்களா?" என்று வினவினாள்.

"சரி அதைச் சோதித்துப் பார்க்கலாம்" என்று இருவரும் முடிவு செய்தாகள. உடனே ஒரு திட்டம் போட்டார்கள். அந்தத் திட்டம் இதுதான்.

"நாம் இருவரும் பக்தர்கள்போன்று உருவத்தை மாறறிக கொண்டு கங்கைக் கரைக்குப் போகலாம். நான் கங்கையில் இறங்கிக் குளிக்கிறேன். சிறிது நேரத்தில் நீர் சுழலில் மாட்டிக் கொண்டதுபோல் நான் நடிக்கிறேன். நீ உடனே கரையிலிருந்து சத்தம்போடு... 'என் கணவரை யாராவது காப்பாற்றுங்கள்!' என்று கூசசல்போடு... அதோடு இன்னொன்றும் சொல்: 'யாராவது ஒரு புண்ணியாத்மா என் கணவரிடம் சென்று அவரது முடியைப் பிடித்துத் தூக்கவேண்டும். அப்படி ஒரு சாபம் எங்களுக்கு இருக்கிறது. புண்ணியாத்மா... அதாவது எந்தப் பாவமும் இல்லாத ஒருவர்தான் அவரைக் காப்பாற்ற முடியும்! அப்படிப்பட்டவர்கள் யாராவது வெள்ளத்தில் குதித்து என் கணவரைச் 'சீக்கிரம் காப்பாற்றுங்கள்!' என்று சொல்லிக் கூச்சல்போடு... பிறகு என்ன நடக்கிறது பார்க்கலாம்!" என்றார் கடவுள்.

அவ்விதம் ஜகன்மாதாவும் ஜகத்பிதாவும் சாதாரண பக்தர்கள் உருவத்தில் கங்கைக் கரைக்கு வந்தார்கள். இறைவன் கங்கையில் இறங்கி குளிக்க ஆரம்பித்தார்.

சிறிது நேரத்தில் திட்டம் போட்டது போலவே சுழலில் மாட்டிக்கொண்டவர் போல் கத்தினார். கரையில் இருந்த விசாலாட்சி தேவி, "ஐயோ, என் கணவரைக் காப்பாற்றுங்களேன்!" என்று அலறினாள்.

பலபேர் ஓடிவந்தார்கள். உடனே இறைவி "பாவம் இல்லாத புண்ணியாத்மா ஒருவரால் தான் என் கணவர் காப்பாற்றப்பட வேண்டும் என்ற விதி இருக்கிறது. ஆதலால் புண்ணியாத்மா யாராவது அவரிடம் போய் அவரது முடியைப் பிடித்துத் தூக்கினால் அவரைக் காப்பாற்றிவிடலாம்!" என்று தெரிவித்தாள்.

ஜகன்மாதா இப்படி கூறியதும் எல்லோரும் திகைத்துப் போய் நின்று விட்டார்கள். அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் செய்த பாவமெல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வர ஆரம்பித்தது.

'சரி, இதற்கு நாம் தகுதி இல்லை' என்று ஒவ்வொருவரும் ஒதுங்கிப் போக ஆரம்பித்தார்கள். இந்தச் சமயத்தில யாரோ ஒருவன் வேகவேகமாக அங்கே ஓடி வந்தான். ஆற்றில் குதித்தான். நீரில் மூழ்கும் நிலையில் இருந்தவரிடம் சென்றான். அவரது முடியைப் பிடித்துத் தூக்கினான். அவரைக் காப்பாற்றிக் கரையில் கொண்டுவந்து சேர்த்தான்.

அபபடிக் காப்பாற்றிய அந்த ஆளை... இவர்கள் இருவரும் தனியாக ஒரு மண்டபத்திற்கு அழைத்துச்சென்றார்கள். "நீ யாரப்பா?" என்று எதுவும் தெரியாதவர்கள் போல் விசாரித்தார்கள்.

"நான் இந்த ஊர் அன்னசத்திரத்தில் வேலை செய்யும் ஒரு சமையல்காரன்" என்று அந்த ஆள் கூறினான்.

"நீ கங்கையில் குளிப்பதுண்டா?" என்று வினவினார்கள்.

"நான் இந்த ஊரில்தான் இருக்கிறேன். இருந்தாலும் தினமும் கங்கையில் குளிப்பதில்லை. எப்போதாவது ஒருநாள் அங்கே குளிப்பேன்!" என்றான் சமையல்காரன்.

"கங்கையில் மூழ்கி எழுந்தால் பாவம் தொலையும் என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது அங்கே இனறைக்கு கங்கையில் குளித்துக்கொண்டிருந்தவர்கள் எல்லோரும் தங்களைப் புண்ணியாத்மாவாக நினைக்கவில்லை. கங்கையில் குளிக்காத நீ... உன்னைப் புண்ணியாத்மாவாக நினைத்து என்னைக் காப்பாற்றுவதாக வந்தாயே... அது எப்படி?" என்று இறைவன் கேட்டார்.

அதற்கு அந்த ஆள், "கங்கையில் குதித்ததற்குப் பிறகு தானே உங்களைக் காப்பாற்றப் போகிறோம்... அப்படி குதிக்கும்போதே என் பாவமெல்லாம் போயிருக்குமே... நான் புண்ணியாத்மாவாக ஆகியிருப்பேனே... அதனால் தான் துணிந்து வந்து உங்களைக் காப்பாற்றினேன்!" என்று பதில் கூறினான்.

பிறகு அவனுக்கு இறைவனும் இறைவியும் காட்சி கொடுத்தார்களாம். கங்கையில் குளித்துக் கொண்டிருப்பவர்களுக்கே தங்களுடைய பாவம் போகும் என்ற நம்பிக்கை பரி பூரணமாக இல்லை! குளிக்காத ஒருவனுக்கு அந்த நம்பிக்கை இருந்தது! அதனால் தான் அவனால் காசி விஸ்வநாதரையும் விசாலாட்சியையும் தரிசிக்க முடிந்தது.நாம் நம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்பதே இந்தக் கதையின் முக்கிய கருத்து.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஆங்கிலத்திற்கு அடுத்ததாக இன்று உலகளாவிய ரீதியில் தமிழ்மொழி!

## -உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அகிலத்தலைவர் சி.செல்லையா புகழாரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை 5.00மணிக்கு யாழ்.நகரில் உள்ள சொண்ட் அரச சார்பற்ற நிறுவனத்தின் மண்டபத்தில் தென்னாபிரிக்காவிலிருந்து வருகை தந்த 15க்கும் மேற்பட்ட உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தைச் சேர்ந்த தமிழர்களுக்கு, உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையினால் வரவேற்பும், தேநீர் விருந்துபசாரமும் நடாத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சி உ.த.ப.இயக்கத்தின் அகிலப் பொதுச் செயலாளரும், இலங்கைத் தலைவருமாகிய ஆ.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் உ.த.ப.இயக்கத்தின் அகிலத் தலைவர் சி.செல்லையாவும் (கனடா) கலந்து சிறப்பித்தார். வரவேற்புரையைக் கவிஞர் செ.பரமநாதன் நிகழ்த்தினார்.

தலைவர் ஆ.சண்முகலிங்கம் தமது உரையில், இலங்கையில், ஈழத்தில் 20ஆண்டுகளாக நடந்த போரினால் பாதிக்கப்பட்ட மக்களையும் சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தத்தால் ஆயிரக்கணக்கில் மறைந்த மக்களின் இடங்களையும் பார்ப்பதற்காகத் தென்னாபிரிக்காவிலிருந்து முதன் முறையாக பெருந்தொகையாக வருகைதந்த தமிழர்களே! 5000மைல்கள் தொலைவிலிருக்கும் உங்கள் நாட்டிலிருந்து இங்கே வந்திருக்கும் உங்களை அன்புடனும் பாசத்துடனும் வரவேற்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

140 ஆண்டுகளுக்கு முன்னர் உங்கள் மூதாதையினர் தமிழ் நாட்டிலிருந்து வெள்ளைக்காரர்களால் கப்பல்களில் கூட்டிச்செல்லப்பட்டு குடியேற்றப்பட்டார்கள். அவர்களின் பரம்பரையினரே நீங்கள். உங்கள் மூதாதையினர் இந்தியாவில் தமிழ் நாட்டிலிருந்து சென்ற தமிழர்களாவர். இன்று அங்கே 6வது அல்லது 7ஆவது சந்ததியினராக வாழ்ந்து வருகிறீர்கள்.

100 வருடங்கள் உங்கள் நாட்டில் தமிழ்மொழி நிலவிவந்துள்ளது. இப்போது தமிழ் பயன்பாடு அங்கு இல்லை. இன்று வாழ்ந்துவரும் 10இலட்சம் தமிழ் மக்களின் பெரும்பாலோர் ஆங்கில மொழியையே பேசுகிறீர்கள். பயன்படுத்துகிறீர்கள். இன்றுள்ள இளஞ்சந்ததியினருக்கும் தமிழ்பேச முடியாது. உங்களின் மூதாதையினர் தமிழர்கள். ஆகையால் நீங்கள் இந்தியர்கள் மட்டுமல்ல இந்தியத் தமிழர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

உங்கள் மூல வேர்த் தொடர்பு தமிழ்நாடு என்பதால் மீண்டும் உங்களின் இளம் சமுதாயத்தினருக்குத் தமிழைக் கற்றுக்கொடுக்கும் பணிகளைச செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் நாட்டின் சூழ்நிலை உங்களுக்குத்தான் தெரியும். ஆகையால் அந்தச் சூழ்நிலையை அனுசரித்து நமது இனத்தின் தாய் மொழியான தமிழை அங்கே வளர்க்க வேண்டும்.

நமது ஈழநாட்டிலும் இந்தியாவில் தமிழ் நாட்டிலும் நமது மொழி ஆதிகாலந்தொட்டு நிலவி வருகின்றது. இன்று தமிழ் நாட்டில் தமிழ் கலப்பு மொழியாகவே உள்ளது. அங்கு 10கோடி தமிழர்கள் இருக்கிறார்கள். 1கோடி பேர்வரை நல்ல.தமிழ் பேசுகிறார்கள். ஏனையோர் தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்து பேசுவதைக் காணலாம். 60சதவீத தமிழ்ச் சொற்களே பேச்சில் காணப்படுகின்றன.

இங்கோ நமது நாட்டில் பேசப்படும் தமிழ் 95வீதம் நல்ல தூய தமிழாகவே விளங்கிவருகின்றது. இந்த நாட்டில் 10ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் தமிழனாக சிவபக்தனாக வாழ்ந்திருக்கிறான். இவனிடம் விமானம் கூட இருந்துள்ளது. இவன் பயன்படுத்திய விஞ்ஞானமோ மாயா, மந்திரசக்திகளோ நமக்குக் கிடைக்கவில்லை. இராமாயணத்தில் காணப்படும் இந்தச் செய்திமூலம் நாம் உலகில் அநாதியானவர்கள். மூத்த குடியினர் என்பதை அறிய முடிகின்றது.

தென்னாபிரிக்காவுக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது. அங்கே தேசிய இனங்கள் பல முன்னணிக்கு வரவுள்ளன. 14 இனங்கள் வாழும் அந்த நாட்டில் எல்லா மொழிகளும் வளர வாய்ப்பிருக்கிறது. இருந்தாலும் தமிழ் உணர்வுள்ள நீங்கள் உங்கள் நாட்டில் தமிழை மீண்டும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம்" என்றார்.

தலைவரின் உரைக்குப் பின்னர் அங்கு வருகை தந்திருந்த தென்னாபிரிக்கத் தமிழ் அன்பர்களின் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் வழக்கறிஞர் பொன்.பூலோகசிங்கம் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

அவர்பேசும்போது, 1996இல் இங்கு ஏற்பட்ட இடம்பெயர்வின் போது அனுபவித்த கஷ்ட அனுபவங்களையும் யுத்த காலங்களில் சந்தித்த அனுபவவியங்களையும் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு நாட்டில் நிரந்தரமான சமாதானம் ஏற்படவேண்டும் என்றும் கூறி அவர் தனது உரையை நிறைவுசெய்தார். இவரைத் தொடர்ந்து உ.த.ப. இயக்கத்தின் பிரமுகர்களான இ.தவகோபால் (செயலாளர்), செ.பரமநாதன் (பொருளாளர்), மத்திய குழு உறுப்பினர் சி.வ.ஆறுமுகசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து தென்னாபிரிக்காவிலிருந்து வருகைதந்திருந்த சிலர் ஆங்கிலத்தில் உரையாற்றினர். முதலில் தென்னாபிரிக்காவின் உ.த.ப.இன் தலைவரும் இயக்கத்தின் துணைத்தலைவருமாகிய கிரிஸ்கிஸ்ரன் ஆதிகுணன் அவர்களின் தமிழும் ஆங்கிலமும் கலந்த சிறப்புரை இடம்பெற்றது.

அவர் தனது உரையில், தாம்வாழும் நாட்டின் சூழ்நிலைகள் வேறுபாடான்வையென்றும் அங்கேவாழும் தமிழர்கள பல நெருக்கடிகளுக்கும் இன ஒதுக்கல்களுக்கும் சுதந்திரத்துக்கு முன்னர் முகம் கொடுத்திருக்கிறார்களென்றும், இன்று அவர்கள் வாழ்வதற்கும் வருமானம் தேடுவதற்கும் 'ஆங்கிலம் படிக்க வேண்டிய அவசியமிருப்பதாகவும் கூறினார். தமிழர் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் துன்பப்படும் போது நிச்சயம் குரல் கொடுக்கவுள்ளதாகவும் கூறினார். சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தங்களின் நிவாரண அன்பளிப்பாகக் கப்பல் மூலம் பெருந்தொகையான உடுபிடவைகள், தண்ணீர்ப் போத்தல்கள் என்பன அனுப்பிவைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பின்னர் உ.த.ப.இயக்கத்தின் அகிலத்தலைவர் சி.செல்லையா தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றும்போது தென்னாபிரிக்கத் தமிழர்களைப் பாராட்டிப் பேசினார். தமிழர்கள் ஒற்றுமையாகச் செயல்பட்டு தமிழ் மொழியையும் பண்பாட்டையும் வளர்க்க வேண்டுமென்றும் இன்று தமிழ்மொழி ஆங்கிலத்துக்கு அடுத்ததாக உலகம் முழுவதும் பேசப்படும் மொழியென்றும் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் திருமதி குப்பம்மா முத்துமாணிக்கம், தனஞ்சம்மா தார்மீகா, தயாளன் முத்து, பேராசிரியர் கீரன் போன்றோர் ஆங்கிலத்தில் சிற்றுரையாற்றினர். நன்றியுரையை வழக்கறிஞர் பொன் பூலோகசிங்கம் ஆங்கிலத்தில் நிகழ்த்தினார். (ற)

# அடுத்த ஆண்டு நவம்பரிலேயே அடுத்த ஜனாதிபதித் தேர்தல்

## -ஸ்ரீ.சு.கவின் செயலாளர் மைத்திரிபால

(கொழும்பு)

இலங்கையின் அரசியலமைபபின்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2006ஆம் ஆண்டு நவம்பர் மாதமே இடமபெறுமெனறு ஸ்ரீலங்கா சுதநதிரககடசியின் செயலாளர் நாயகம் அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மக்கள் சக்தி நடவடிக்கையின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு ஆற்றிய உரையில் தெரிவித்த விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சட்டம் அலலது அரசியலமைப்பில் சிக்கலிருந்தால அது தொடர்பாக உயர் நீதிமனறத்தில் விளக்கம் கோரவேண்டுமென்பது அரசியல் அமைப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் உயர்நீதிமன்றத்திடமோ சட்டமா அதிபரிடமோ கூறாமல் ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் நாள் குறிபபிடவேண்டுமெனற ரணிலின் கூற்று சிந்திக்கவேண்டிய ஒன்றாகுமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலை இவ்வருடம டிசம்பர் மாதம் நடாத்தவேண்டுமெனக்கோரி பேரணிகளை நடாத்திவருவது குறிப்பிடத்தக்கது.

(ற-8)

### மின் அலகு அளவீட்டுமானி பொருத்தப்படவில்லை!

சாவகச்சேரி மின்சார சபையால் புதிதாக வழங்கப்படும மின் இணைப்புகளிற்கு மின் அலகு அளவீட்டுமானி பொருத்தபபடாது ஓர் நிலையான கட்டணத்தினை அறவிடுவதனால தாம் பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

அலகு அளவீட்டு மானி பொருத்தப்பட்டு இரண்டு மூன்று பல்ப் எரியவிடும் வீடுகளிற்கு மாதாந்தம் எழுபத்தைநது ரூபா முதல் நூறறி ஐம்பது ரூபாவரை கட்டணம அறவிடும போது, அதேயளவில் மின்னைப் பயனபடுத்தும் புதிய இணைப்பினை பெற்றுக்கொள்வோர் அதிகரித்த தொகையினை ஓர் நிலையான கட்டணமாக செலுத்தவேண்டியுள்ளது. இதனால் தமமீது செலவினை அதிகப்படுத்துவதாக மின்சாரசபை மீது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே இதுகுறித்து உரிய அதிகாரிகள் கவனமெடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (க-21)

# தமிழகப் பயணம்

**பயணக் கட்டுரை**

35 மாமல்லவபுரத்தில் நுங்கு குடித்துவிட்டுத் தெருவோரங்களில் இருக்கின்ற சிறபக் கடைகளுககுச் சென்றோம். கருங்கற்களில் செதுக்கப்பட்ட தெய்வச் சிலைகள், சிற்பி சோகிகளால் வடிவமைக்கப்பட்ட மாலைகள், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன. இவற்றைப் பார்ப்பதில் கொள்ளையின்பம். மிக நுட்பமாக சிலைகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் பேசும் சிலைகளாகக் காட்சி கொடுத்தன. தமிழகத்துக் கலைச்சிறப்பிற்கு மாமல்லவபுரம் தக்கதோர் சான்று. கலைத்

டிருந்தன.


அவற்றின் கோலம் ஏழ்மையின் சின்ன

பார்க்குமிடமெங்கும் தெய்வ விக்

ஆலயம் செல்லக் காத்திருக்கும் சிலைகள்



படம்:-உதயகுமார், இராஜேஸ்வரன்



# இறைவனுக்கே வடிவம் தந்த விஸ்வப் பிரமாக்களுக்கு ஏன் இந்த வறுமை



படம்:-தம்பியண்ணா

**மாமல்லவபுரத்தின் மலையில் அமைந்த கோவில்**

துவத்தைத் தெய்வமாகப் போற்றும் அற்புதமான பாங்கை அப்பகுதி மக்களிடம் கணணுற்று வியர்த்துப் போனேன்.

## அவர்கள் மாமிசம் உண்பதில்லை

தெய்வ விக்கிரகங்களை வடிவமைக்கும் சிற்பிகளின் தொழிற் கூடங்கள் கிடுகுகளால் வேயப்பட்டிருந்தன.

மாகக் காட்சி தந்தன.

இறைவா ! உனக்கே வடிவம் தந்த விஸ்வப்பிரமாக்களுக்கு ஏன் இந்த வறுமை. உன் வடிவமைப்பில் இறுதியாகவே கண்ணைத் திறப்பதால் நீயும் அவர்களை இறுதியாகவே பார்க்கின்றாயா? இந்தக் கேள்விகள் என் உள்ளத்தில் ஒலித்துக்கொண்

கிரகங்கள், ஓட்டைக் குடிசையில் இருந்து செய்யப்பட்ட இந்த விக்கிரகங்களே வானுயர்ந்த கோபுரங்களிலும், கர்ப்பக் கிரகங்களிலும் குடி புகுந்து கொண்டுள்ளன என்பதை நினைத்த போது உள்ளம் நெருடியது.

அந்தகக் கவி வீரராகவ முதலியார் பாடிய

*கவிகற்றவர்க்கும், கணிகற்றவர்க்கும், கம்மாளருக்கும்*

*ஓவிகற்றவர்க்கும், உபாத்திகளுக்கும், உயர்ந்தமட்டும்*

*குவிவைக்கும் ஒட்டர்க்கும், கூத்தாடிகட்கும், குருக்களுக்கும்*

*இவரெட்டுப்பேர்கட்கு நீங்காத் தரித்திரம் என்றைக்குமே!*

என்ற வரிகளே நினைவிற்கு வந்தன. வீரராகவ முதலி பாடிய பாடல் வரிகளில் கூறப்பட்ட எல்லோருக்கும் பொருந்துமோ இல்லையோ ஆனால் மாமல்லவபுரத்தில் சிற்பங்கள் செய்பவர்களுக்கு சாலவும் பொருத்துடையதே.

கிடுகுகளால் வேயப்பட்ட கொட்டில்களுக்குள் காத்திருக்கும் தெய்வ விக்கிரகங்களின் அழகு மிகு வடிவங்களைக் கண்டுகளித்த பின்னர் ஆட்டோவில் ஏறிக்கொண்டோம். ஆட்டோ சாரதி மாமல்லவபுரத்தின் இன்னொரு பகுதிக்குக் கூட்டிச் சென்றார். கத்தரி வெய்யிலின் அகோரம் உச்சம் கொள்ள வெப்பத்தைத் தணிப்பதற்காகத் தெருவோரத்தில் இருந்த குளிர்பானக் கடைகளுக்குச் சென்றோம். அங்கு மோர் விற்பனையில் ஈடுபட்டிருந்த பாட்டி ஒருவர் எம்மை வலிந்திழுக்க மறுக்கமுடியாமல் நானும திரு. திருச்செல்வமுமாக மோர் குடிக்கும் முடிவை எடுத்தோம். எங்களுடன் வந்திருந்த திரு. கணேசமூர்த்தி, திரு. உதயகுமார், திரு. இராஜேஸ்வரன் ஆகியோர் குளிர்பானம் குடிப்பதற்காகச் சற்றுத் தொலைவாகச் சென்றிருந்தனர். ஒரு டம்ளர் மோர் 5 ரூபாவுக்குத் தரப்பட்டது. வெய்யில் களைப்பு இருவரும் தலா இரண்டு டம்ளர் மோரை வாயில் ஊற்றிக் கொண்டோம். 20 ரூபாவை திரு. திருசசெல்வம் எடுத்துக் கொடுத்தார்.

தமிழகத்து மோர்ப் பாட்டியுடன் சில நேரங்கள் அளவளாவிக் கதைத்தோம். எமது கதைக்காகவோ அல்லது தனது விற்பனைத் தந்திரத்திற்

என். விஜயன்

காகவோ வேண்டாம் வேண்டாமென நாம் கூறிக்கொண்ட போதிலும் சேலம் மாங்காய்த் துண்டைப் பாட்டி தந்தார். அதனோடு அங்கிருந்து வெளியேறி மலையில் இருக்கும் கற்கோவிலைப் பார்ப்பதற்காக பாறைகளில் செதுக்கப்பட்ட படிகளில் ஏறினோம். இரண்டு, மூன்று படிகளில் கால் வைத்திருப்போம் தம்பிகளா... தம்பிகளா... குரலொலித்தது. திரும்பிப் பார்த்தோம். மோர் தந்த பாட்டி ஆச்சி மனோரம்மா போல ஓடி வந்தார்.

ஏப்பா, மோர் குடிச்சிற்று காசைத் தராமல் போறிங்களே! பாட்டியின் வார்த்தை எம்மைத் தூக்கி வாரிப் போட்டது.

எத்தனையோ பேர் அந்த வழியால் சென்றுகொண்டிருக்கும் போது மோர் குடித்த காசைத் தரவில்லையே என்ற பாட்டியின் கூப்பாடு அந்தக் கைலாய மலைக்கும் கேட்டிருக்கும் போலும். மலையேறியவர்கள் எம்மை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். மோரைக் குடித்துவிட்டு காசைக்கொடுக்காமல் மலையேறுகிறார்களே இவர்கள் என்று அவர்களின் பார்வைக்கு அர்த்தம் கொடுக்கலாம். நிலைமை அந்தளவுக்கு மோசமாக இருந்தது.

நானும் திரு. திருச்செல்வமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு ஏன் பாட்டி 20 ரூபா தந்தோம் அல்லவா? என்று கேட்டோம். இல்லேப்பா தந்தா நான் ஏன் வாறேன். பாட்டியின் பதில் எம்மை வாயடைக்க வைத்தது. எதுவும் பேசாமல் 20 ரூபாவை எடுத்துக் கொடுத்து விட்டோம். பாட்டியின் வழமையான வேலைதான் இதுவா? அல்லது வயோதிபத்தின் இயல்பான மறதியா? இரண்டிற்குமே விடைகாண முடியாமல் மலை ஏறினோம். மலையின் உச்சியில் செதுக்கப்பட்டிருந்த அழகிய கோயில் மண்டபம் எம்மை ஆற்றுப்படுத்தியது. (திங்கள் வளரும்)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 58

ரயில் கர்ஜனை செய்துகொண்டு ஓடத் தொடங்கியது. அந்த ரயில் 100மைல் கடந்து தான் நிற்கும். ரயில் புறப்பட்டவுடன் சாமான்களைச் சீற்றுக்கு அடியில் வைக்கலாம் என்று சீற்றுக் கடியில் கண்ணைச் செலுத்தினேன்.

சீற்றுக்கடியில் காக்கிச் சட்டையணிந்த கள்ளன் ஒருவன் நீண்ட கத்தியுடன் படுத்துக்கொண்டிருந்தான். அவனைக் கண் டவுடன் நான் நடுநடுங்கினேன்; தலை சுற்றியது. நம் வாழ்நாள் முற்றியது என்று கதிகலங்கி நின்றேன். ஆனால் என் மதி மட் டும் கலங்கவில்லை.

நான் முருகப் பெருமானை வழிபடுகின்றவள். முருகனை மனதில் நினைத்தேன். வானத்தில் மின்னல் தோன்றியது போல் என் மனதில் திடீரென்று ஒரு சமயோசித் புத்தி தோன்றியது.



நான் குழந்தைகளைப் பார்த்து "என்ன ஒண்ணுக்கு வரு கிறதா பாத்ருமிற்கு அனுப்பி நானும் பாத்ருமில் நுழைந்து கத வைச் சாத்தி தாள்ளிட்டுக்கொண்டு அபாய சங்கிலியை இழுத் தேன். ரயில் நின்றது. ரயில்வே கார்டு இரண்டு காவல் துணை யுடன் வந்தார். கூட்டமும் கூடியது. நான் கதவைத் திறந்து வெளியே வந்து காவல்துறையினரை அழைத்துச் சீற்றுக்கடி யில் உள்ள கள்வனைக் காட்டினேன். காவல்துறையினர் அவன் கையில் விலங்குபோட்டு அழைத்துச்சென்றார்கள்.

இவ்வாறு செய்யவில்லையானால் குழந்தைகளுடன் நான் அன்று அந்தக் கள்வனால் மாண்டிருப்பேன். முருகப்பெருமான் எனக்கு அந்த வேளையில் அந்த புத்தியைக் கொடுத்தார். எல்லாம் அவனுடைய கருணை. என் உடல், பொருள், ஆவி அனைத்தும் முருகனுடைய உடை மைகளேயாகும்" என்று கூறினார்.

இநத நிகழ்ச்சியைக் கேட்டு நான் அதிசயம் அடைந்தேன். பெணணறிவு நுண்ணறிவு என்று எண் ணி வியந்தேன்.

### அரிய நண்பர்

ஒரு சமயம் சுசீந்திரத்திற்கு அங்கு நடைபெறும் திருவிழாவின்போது விரிவுரை புரியச் சென்றிருந்தேன். நாகர்கோயில் பெரிய தொழிலதிபரும், கர்மயோகியும், கோடீச்வரரும் ஆகிய பயோனியர்குமாரசுவாமி அவர்கள் விரிவுரைக்கு வந்திருந்தார். விரிவுரை முடிந்தபின் அவரது திருமாளிகைக்கு என்னை அழைத்துக்கொண்டு சென்றார். அவருக்கு ஆண் சந்ததி இல்லை. நான்கு புதல்வியர் இருந்தனர். அந்த நான்கு புதல்வியரையும் அழைத்து "நான் உங்களுக்கு அப்பா அன்று; வாரியார் சுவாமிதான் உங்களுக்குத் தந்தை" என்று கூறி என்னை ஆசனத் தில் இருக்கவைத்து, அவர்கள் நால்வரையும் எனக்குச் சிற்றுண்டி படைக்குமாறு செய்தார்.

மறுநாள்: அவர்களுக்கு என்னை அறிவுரை கூறுமாறு செய்தார். அன்றிரவு திருநெல்வேலி யில் 2மணி ரயிலில் நான் புறப்பட வேண்டியதாக இருந்தது. தன்னுடைய டிரைவரை அழைத்து "குற்றாலம்! நமது காரில் சுவாமிகளைக் கூட்டிப்போய் திருநெல்வேலி சந்திப்பில் விட்டுவிட்டு வா!" என்று கட்டளையிட்டார்.

அவரிடம் விடை பெற்றுக்கொண்டு காரில் சென்று திருநெல்வேலியில் ரயில் ஏறிச்சென்றேன.

அடுத்த ஆண்டு சுசீந்திரத்திற்கு விரிவுரை செய்யச்சென்றேன். அப்போது பயோனியர் குமார சுவாமியுடைய இல்லத்தில் தங்கியிருந்தேன். விரிவுரை முடிந்தபின் குமாரசுவாமியவர்கள் என் னைப் பார்த்து "சுவாமி! இன்று இரவே போக வேண்டுமா?" என்று கேட்டார். "அவசரம் இல்லை. நாளை போகிறேன்" என்றேன். அப்பொழுது என் உள்ளததை உருக்கும் சில வார்ததைகளைக் கூறினார்.

"சுவாமி! சென்றமுறை தாங்கள் இரவே திருநெல்வேலிக்குப் புறப்பட்டீர்கள் என்னுடைய காரைக் கொடுத்து என்னுடைய டிரைவர் குற்றாலலிங்கத்தை அனுப்பினேன் என்ன இருந்தா லும் என் டிரைவரும் மனிதன்தானே? தூக்கம் யாரையும் ஏமாற்றும். தாங்கன் தமிழ் நாட்டுப் பொது உடைமை. தங்களுக்கு ஒன்று வந்தால் அது தமிழகத்திற்கு வந்த பெரு நஷ்டமாகும். ஆதலால் என்னுடைய டிரைவர் குற்றாலலிங்கத்தைப் பார்த்து, "குற்றாலம்! சுவாமியைக் கூட் டிப்போய் ரயிலேற்றிவிட்டு எனக்குப் போன் பண்ணு, உன்னுடைய போன் வந்த பிற்பாடுதான் நான் படுப்பேன்" என்று கூறினேன். அவன் தங்களை ரயிலேற்றிவிட்டுப் போன் செய்யும்வரை நான் போன் அருகிலேயே அமர்ந்திருந்தேன். அவனிடமிருந்து போன்வந்த பிற்பாடு நான் நிம் மதியாகப் படுத்துக்கொண்டேன். ஆதலால் தாங்கள் இரவில் பிரயாணம் செய்யாமலிருப்பது நல்லது" என்று கூறினார்.

நான் அவருடைய அன்பின் ஆழத்தை நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்தேன். காரைக் கொடுக் கலாம். டிரைவரை அனுப்பலாம். ரயில் ஏறியபின் போன் வரும்வரை ஒரு கோடீச்வரன் கண் விழித்துக்கொண்டிருப்பது என்பது அரிதிலும் அரிது.

பின்னர் நான் நாகர்கோயிலுக்கருகிலுள்ள ஊர்களுக்கு விரிவுரை செய்யப்போகும்பொழு தெல்லாம் அவருடைய அன்புக்கடலில் முழுகுவேன்.

### டிரைவரின் அன்பு

மேலே குறிப்பிட்ட பயோனியர் குமாரசுவாமியவர்கள் வயிற்றில் நோய்வந்து வேலூர் அமெ ரிக்கன் மருத்துவமனையில் முருகனடி சேர்ந்தார். கார் டிக்கியில் ஒரு பெருந்தொகை இருந் தது. அது இருக்கும் தன்மை மூன்று பேருக்குத்தான் தெரியும்.

ஒன்று பயோனியர் குமாரசுவாமி, இரண்டாவது டிரைவர், மூன்றாவது கடவுள். பணம் யாரை யும் மயக்கும். கொலை செய்யவும் தூண்டும். குமாரசுவாமியின் பூதவுடல் காரில் நாகர்கோவில் சேர்ந்தது. குமாரசுவாமியுடைய குடும்பம் பாகம் பிரியாதது. டிக்கியிலிருந்த அத் தொகையை டிரைவர் குற்றாலம், தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணாமல் நாகர்கோவிலில் உள்ள காங்கிரஸ் தலைவர் நேசமணி அவர்கள் கையில் கொடுத்து "இது முதலாளி பணம், அவர்களின் உப்பும் சோறும் உண்டு வளர்ந்தவன். முதலாளிக்கு நான் தூரோகம் செய்யக் கூடாது. இந்தப் பணத்தை முதலாளி குடும்பத்தினரிடம் சேர்க்க வேண்டியது" என்று கூறிப் பணத்தை அவரிடம் ஒப்படைத்தார். அப் பெருந்தொகை ஒரு ஏழை டிரைவரை மயக்கவில்லை அந்த டிரைவரின் பண்பு எத்தனை உயர்ந்தது? என்பதை உய்த்துணர்வார் உணர்வார்கள்.

நாகர்கோவிலில் அன்பு வடிவாகிய மீ.பாலசுப்பிரமணியம் அவர்கள், பூதப்பாண்டி தங்க வேல் பாகவதர் அவர்கள், கோட்டாறு சுப்பிரமண்ய மூப்பனார் என்ற அன்பர்கள் எப்பொழுது தும் என்னிடம் அன்பாகப் பழகுவார்கள்.

பயோனியர் குமாரசுவாமியவர்களின் மறைவுக்குப்பின் அவருடைய மூத்த மகள் பகவதி அம்மையாரும், அவருடைய கணவனார் டாக்டர் பத்மனாபன் அவர்களும் என்னிடம் மிகவும் அன்பு செலுத்தி உபசரிப்பார்கள். டாக்டர் பத்மனாபன் தன் மாமனாருடைய பெருமையை மக் கள் உணருமாறு ஆண்டு தோறும் குமாரசுவாமி நினைவு விழா என்று என்னை அழைத்து ஒரு தொடர்விரிவுரை செய்வித்து ஒரு ஞானவேள்வி செய்து வருவார் ஆயினர்.

### திருப்பராய்த்துறை இராமகிருஷ்ண குடில்

திருச்சிராப்பள்ளிக்கு 10மைல் மேற்கே திருப்பராய்த்துறை என்ற திருத்தலத்திலே திருக்கோயி லுககு மேற்கே காவேரிக்குத் தென்கரையில் ஸ்ரீராமகிருஷ்ண குடில் என்று ஒரு நிறுவனம உள ளது. அதில தாய்தந்தை இருவரும் இல்லாத அனாதைக் குழந்தைகள் சற்று ஏறககுறைய 360 பிள்ளை கள் உண்டி,உடை,கல்வி,மருந்து முதலிய நலம் பெற்று வளம்பெறுகிறார்கள். (தொடரும்)

# அமைதிக்கு அடிக்கப்பட்ட சாவுமணி

## உப்புவெளி படுகொலை பற்றி

## முல்லை தேசிய எழுச்சி பேரவை அறிக்கை

(முல்லைத்தீவு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதி காலை உப்புவெளிப்பகுதியில் நடாத்தபபட்ட போராளிகள் மீதான தாக்குதல் சிறிலங்கா அரசின் போர்த்தப்பட்ட முகத்திரையைக் கிழித்தெறிந்து விட்டது. அமைதிப போர்நிறுத்தக் காலங்களில் இது போன்ற அடாவடிச் செயல்களால் எத்தனையோ போராளிகளையும், பொது மக்களையும் நாம் இழந்து விட்டோம்.

கையில் ஆயுதமின்றி கழுத்தில சயினயிட் குப்பியின்றி அமைதி விலங்கினால் கட்டப்பட்டபோராளி களை இத்தகைய நயவஞ்சகத் தினால் கொலை செய்வது வீர மல்ல உப்பு வெளி செல்வநாயக் புரப் படுகொலை அமைதிககுஅடிக கப்பட்ட சாவு மணி சிஙகள அரசை இனியும் நம்பமுடியாது. நம்பினால் மேலும் மேலும் போராளிகளை இழக் கும் நிலையே ஏற்படும்.

முல்லைத்தீவு மாவட்ட தேசிய கிழககில் பேரவை, போராளிகளின் இழப்புத் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித் துள்ளது.

எங்கள் போராளிகளின் உதிரம் எந்த வேளையிலும் அநியாயமாகச் சிந்தக்கூடாது. ஈழவிடுதலைக்காக அது அர்பபணிக்கப்பட வேண்டியது எங்கள் தானைத் தலைவன் இத் தகைய இழி செயல்கண்டு இனி யும் பொறுத்திருக்க மாட்டார் என நம்புகிறோம். அமைதி ஏன்ற போர் வையில் எம் இனத்தை இனியும் அழிக்கமுடியாது" என அவ்வறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (து-128)

# சகல பல்கலைக்கழகங்களுககும் பயிற்றப்பட்ட பட்டதாரிகள்!

(கொழும்பு)

கல்விசாரா ஊழியர்களின்வேலை நிறுத்தம் காரணமாக பாதிக்கப்பட் டுள்ள சகல பல்கலைக்கழகங்க ளிலும் பயிற்றப்பட்ட பட்டதாரிகளை இணைத்துக்கொள்ள தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இதற்கமைய பல்கலைக்கழகம ஒன்றில் 20 பட்டதாரிகள் இணைக் கப்படுவார்கள் என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் றஞ்சித் மெண்டிஸ் தெரி வித்துள்ளார்.

பல்கலைக்கழக பீடாதிபதிக ளின் ஆலோசனைக்கு ஏற்ப கல்வி சாரா ஊழியர்களினால் மேற்கொள் ளப்பட்டுவந்த செயற்பாடுகளை பயிற்றப்பட்ட பட்டதாரிகள் ஊடாக மேற்கொள்ளமுடியுமென றஞ்சித் மெண்டிஸ் குறிப்பிட்டுள்ளார்.

கலை, முகாமைத்துவம், வர்த் தக பீடங்களைச் சேர்ந்த மணவர் களின் நடவடிக்கைகளுக்கும் இந் தப பட்டதாரிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஆய்வுகூடம் மற்றும் வைத்திய கூடம் என்பவற்றுக்கான சேவைகளை இந்த மாணவர்களிட மிருந்து பெறறுக்கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பட்டதாரிகளை சேவையில் இணைததுக்கொள்வது தொடர்பாக பல்கலைக்கழக உபவேந்தர்களு டன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விரைவில் பேச்சு வார்த்தையொன்றை நடத்தவுள் ளது.

இதேவேளை, கல்விசாரா ஊழி யர்களின் வேலை நிறுத்தத்தின் காரணமாக விரிவுரையாளர்க ளுக்கோ நிறைவேற்று அதிகாரி களுககோ மாத சம்பளத்தை வழங் குவதில் எவ்வித காலதாமதத்தை யும் ஏற்படுத்தாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

# பதிவுகள் ஒழுங்கில்லாததால் நிவாரணம கிடைக்கவில்லை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கடற்றொழி லாளர்களின் பதிவுகள் கடற்றொழில் பரிசோதகர்களால் ஒழுங்கான முறையில் பதிவுசெய்யப்படாத தால் அவர்கள் அரசாங்கத்தினா லும் பொது அமைப்புக்களினா லும் வழங்கபபடும் வலை, மீன்பிடிப் படகுகள் முதலிய உபகரணங்க ளைப் பெறமுடியாதுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த திங்கட்கிழமை வடம ராட்சி கிழக்கில் 3ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் வசித்துவந்த போதிலும் 30பேருக்கு மாத்திரம் வலையும் 36பேருக்கு மாத்திரம் வலைமற்றும் குதிரை வலு இயந்திரங்களும் வழங்கப் பட்டுள்ளதாகவும் ஏனையோர் புறக் கணிக்கப்பட்டுள்ளதாகவும் அப் பகுதி வாழ் கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

முன்னர் வடமராட்சி கிழக்கில் தாளையடியிலும் ஆழியவளையிலும் இயஙகிவந்த கடற்றொழில் பரிசோத கர்களது அலுவலகம் 1996ஆம் ஆண் டுக்குப் பின் இயங்குவதில்லை.

கிட்டத்தட்ட 3ஆயிரம் கடற் றொழிலாளர்கள் இருக்கும் இப்ப குதியில் தாளையடி, செம்பியன் பற்று, மாமுனை ஆகிய மூன்று கிராமங்களிலும் 90பேரும் மருதங் கேணி தொடக்கம் சுண்டிக்குளம வரையிலான 7கிராமங்களை உள் ளடக்கிய 33கிலோ மீற்றர் பரப்பள வைக்கொண்ட பகுதியில் 35பேருமே கடற்றொழில் பரிசோதகர்களால் பதிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

இக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய, கடற்றொழில் பரிசோதகர் கள ஒவவொரு இடத்துக்கும் சென்று பதிவுகளை மேற்கொள்ள வேண் டும் அல்லது கிராம அலுவலர் கடற்றொழிலாளர் சங்கமூலம் பதி வுகளை மேற்கொள்ள வேண்டுமெ னப் பாதிக்கப்பட்ட கடற்றொழிலா ளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

சரியான முறையில் எல்லா விப ரங் களும் அனுப்பப்பட்டிருந்தால் மற்றைய மாவட்டங்களைப் போல இங்குள்ள 3ஆயிரத்துக்கும் மேற் பட்ட கடற்றொழிலாளர்களுக்கும் உதவிகள் கிடைத்திருக்கும் என வும் அவர்கள் கூறுகிறார்கள். (து-97)

# மாணவர் அனுமதியில் இலஞ்சம் நாவலப்பிட்டியவில் அதிபர் கைது!

(கொழும்பு)


மாணவன் ஒருவனை பாடசாலை யில் சேர்த்துக்கொள்வதற்கு இலஞ் சம் பெற்றார் என குற்றம் சாட்டப் பட்ட நாவலப்பிட்டியவைச் சேர்ந்த பிரபல கல்லூரி ஒன்றின் அதிபர் நேற்று முன்தினம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்டப்பட்ட பாடசாலை யில் 10ஆம் தரத்துக்கு மாணவன் ஒருவனை சேர்த்துக்கொள்வதற்கா கவே இவ் அதிபர் லஞ்சம் வங்கிய தாக இலஞ்ச ஊழல் மோசடி விசா ரணை ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறிப்பிடப்பட்ட மாணவனை சேர்த்துக்கொள்வதற்கு 2500ரூபா வினை இவர் இலஞ்சமாக கோரி யுள்ளார். அந்த தொகையில் 1500 ரூபாவினை பெற்றுக் கொள்ளும் போதே பிரஸ்தாப அதிபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அதிபரைநீதி மன்றில் ஆஜர்படுத்த இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது.(ற-8)

# நரை முடியைத் தடுக்க நகங்களை உரசுங்கள்...!



நரைத்த தலைமுடியை மறைக்க இனி டை அடிக்கவேண்டியதில்லை. அழகு சாதனப் பொருட்களும் வேண்டாம். எல்லாம் உங்கள கையிலேயே உள்ளது. கைவிரல் நகங்களால் முடியும்!

நரம்புகளுக்கும், தலைமுடியின் வேர்களுக்கும் இடையில் நேரடித் தொடர்பு உள்ளது. இதனால் ஒரு கையில் உள்ள நகங்களை மற்றொரு கையில் உள்ள நகங்களுடன் உரசுங்கள். இந்த உரசல் மூலம் மண்டை ஓடடுகக்குச் செல்லும் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதன மூலம் நரைத்த முடி உண்டாவது தடுக்கப்படும்.

நகங்களை உரச பிடிக்கவில்லையா? அப்படியானால் மேலும் 2 வழிகள் உள்ளன.

* காலையில் எழுந்ததும் முன் நெற்றியில் முடி தொடங்கும் பகுதியில் கைகளால் மெதுவாக அழுத்துங்கள். இப்படிச் செய்வீதால் மண்டையோட்டில் செல்லும் இரத்த நாளங்களில் உள்ள அடைப்பு நீங்கி, சீரான இரத்த ஓட்டத்துக்கு வழி வகுக்கும். இதனால் நரைத்த முடி உண்டாவது தடுக்கப்படும்.

*அடுத்து த்லைமுடி நரைப்பதை தடுக்க கபல்பாட்டி என்ற விசேட யோகாசனம் ஒன்று உள்ளது.

படத்தில் காட்டியபடி தரையில் அமர்ந்து கொண்டு 2 கைகளையும், தொடைகளுடன் சேர்த்து விரைப்பாக வைத்துக்கொள்ளுங்கள். இப்போது உள்ளே இருக்கும் காற்றை 2 மூக்கு ஓட்டைகள் வழியாகவும் வெளியேற்றி, வயிற்றை உளளுக்குள் இழுங்கள். எவ்வளவு காற்றை வெளியேற்றுகிறோமோ, அந்தளவுக்கு வயிறு உள்ளுக்கு சென்றுவிடும். பின் வயிறு பழைய நிலையை அடையும்படி செய்யுங்கள். இப்போது ந'றைய காற்றை உள்ளுக்குள் உறிஞ்சிக் கொளவீர்கள்.

இதுபோன்ற பயிற்சியை திரும்பத் திரும பச் செய்யும் போது, நரைத்த முடி தலை காட்டாது.

# காபி குடித்தால் நீரழிவு ஆபத்து குறையும்...?



வழமையாக காபி குடிப்பவர்களுக்கு டைப்~ 2 நீரழிவுநோய் வருவதற்கான வாய்ப்பு குறையும் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

காபி குடிக்கும் பழக்கத்துக்கும், நீரழிவுக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து கடந்த 15ஆண்டு காலமாக நடந்த மருத்துவ ஆய்வுகளை ஆய்வு செய்து அவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 6 அல்லது 7 கப் வீதம் காபி குடித்தால், நீரிழிவு வருவதற்கான வாய்ப்பு 35 சதவீதம் குறைந்த விடுகிறதாம். ஆனால் தினந்தோறும் 2 கப் காபி குடித்தால் இந்தளவு பலன் கிடைக்காதாம்.

தினந்தோறும் 4 முதல் 6 கப் வரை காபி குடித்தால் டைப்~2 நீரழிவுக்கான வாய்ப்பு 28 சதவீதம் குறைகிறதாம். காபியின் இந்த மருத்துவ குணத்துக்கு அதில் உள்ள காங்பைன் பொருள் காரணம் என்று கருதப்படுகிறது.

எனினும், நீரழிவு நோய் வராமல் தடுக்க, காபி குடிக்க வேணடும் என்று இப்போதைக்கு சொல்ல முடியாது. இதுபற்றி இன்னும் நிறைய ஆராய்சசிகள் நடத்த வேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

காபி அல்லது தேநீருடன் சர்க்கரையை சோக்கும் போது, இன்சுலின் சென்ஸ்டிவிட்டி குறைகிறது. ஆனால் பால் அல்லது மற்ற கிரீம் பானங்களுடன் சர்க்கரை சேர்க்கும்போது இதுபோன்ற அதிசய மாற்றம் நிகழ்வதில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

# உங்கள் கண்பார்வை எப்படி?

உங்கள் க்ண்பார்வை சரியாக இருக்கிறதா? கோளாறு உள்ளதா? எப்படி கண்டு பிடிப்பது? அதற்கு ஒரு எளியமுறை இருக்கிறது. உங்கள் நண்பரை 8அடி தூரத்தில் நிற்கச் சொல்லுங்கள்.

ஒருகையை விரித்து, விரல்களை காட்டச் சொல்லுங்கள்.

உங்கள் இடக் கண்ணை மூடிக கொள்ளுங்கள். வலக்கண்ணால் விரல்களை எண்ணுஙகள்.

பிறகு உங்கள் வலக் கண்ணை மூடிக் கொள்ளுங்கள். இடக் கண்ணால் எண்ணிப் பாருங்கள்.

இரண்டு தடவையும் விரல்களை சரியாக எண்ண முடிந்ததா? முடிந்தால் பார்வை சரியாக இருக்கிறது.

முடியவில்லை என்றால், கண்டிப்பாக நீங்கள் மருத்துவரிடம் போய் கண பரிசோதனை செய்து கொளளுங்கள்.




## சிந்தனைக்கு......

எவனொருவன் யோசித்து பின் அழகான மிதமான வார்த்தைகளைப் பேசுகிறானோ அவனே பெரியோர்களின் மதிப்பைப் பெறுகிறான். *-மகாவீரர்*

கோபக்காரனிடமிருந்து கொஞ்சம் விலகி இரு. மௌனமாக இருப்பவனிடமிருந்து என்றுமே விலகி இரு. *- ஓர் அறிஞர்*

# குறுக்கெழுத்துப் போட்டி இல-68




*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல – 68**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*முழுப் பெயர்* :- ..............................................
*முகவரி* :- ..............................................
..............................................
..............................................

*இங்கே வெட்டுக* ----------------------------------------

***மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 21ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.***

## இடமிருந்து வலம்

(1)அண்டை நாட்டுக்கு பாலம் அமைக்க எண்ணிய இவா நினைவு நனவாகவிருக்கிறது. (4)தலைவன- இபபடியுமழைப்பா. (5)புகழசசி இதனைக் குறிக்கும். (6)தீக்கோழி இதைக்கூட உண்ணுமாம. (7)அவசர செய்திகளை இதன்மூலம் அனுப்புவா. (8)தானிய வகையைச சேர்ந்தது. (11)காட்டு மரங்களிலொன்று. (12)புள் வகைகளிலொன்று.

## மேலிருந்து கீழ்

(1)நாம் ஒருவருக்கொருவா இது காட்டாது ஒன்றுபட்டு வாழ வேண்டும். (2)உதாரணம் இதனைக் குறிக்கும். (3)'.... வரைந்த பாதை வழியே வாழ்க்கை ஓடுது...' என்றொரு பாடல். (4)இலை குழைகளால் வேய்ந்த குடிசை. (9)தூர அளவை (கீ.மே) (10)மரக்கறி வகைகளிலொன்று.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.66 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1.பாரதியார் 22.கிழங்கு 26.மதி 31.திம்பு

### மேலிருந்து கீழ்

1.பார்வதி 2.தியானம் 3.நாரதர் 4.வரப்பு 19.பழம் 20.பாகு 21.கமம். 27.திதி

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- **வி.மயூரன்**
**அராலி தெற்கு**
**அராலி.**

**இரண்டாம் பரிசு** :- **து.விமலாதேவி**
**கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மூன்றாம் பரிசு** :- **வெ.கஜலக்சுமி,**
**கற்பகப்பிள்ளையார் வீதி,**
**கோப்பாய் தெற்கு.**

## போடடியில கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

சி.சஙகீதா, சி.சம்பூரணி, வட்டுக்கோட்டை. வே.குமாரசுவாமி, கரவெட்டி. வ.மன்னா அன்ரனி, குருநகா. இ.இளமதி, மானிப்பாய. சி.அன்னலிங்கம், சுழிபுரம். பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை. ப.சிவசூரியர், சங்கானை. கே.அரசேஸ்வரன், யாழ்ப்பாணம். ம.மைதிலி, கோண்டாவில். ஆ.டெனிஸ்ரா, மானிப்பாய். வி.செல்வநாயகம், புததூா. க.புஸ்பராணி தம்பசிட்டி, க.ஞானோதயன், தெல்லிப்பழை. து.நக்கீரன், மல்லாகம், வி.சாத்வீகா, பண்டத்தரிப்பு. அராஜா, குருநகா. எஸ்.தர்சினி, வண்ணாபண்ணை. எஸ்.கஜசங்கவி, இணுவில். எம்.கோகுலன், மானிப்பாய. வ.சந்தியா, யோகபுரம. ம.கேதாரம், வேலணை. ச.சர்மினி, ஊர்காவற்றுறை.

# யாழ்.பல்கலைக்கழக தெருவெளி அரங்கக் குழுவின் அரங்காலயம்

26.12.2004 அன்று உலகையே உலுக்கிய கடல்கோள் அனர்த்தம் வடக்கு-கிழக்கையும் சூழ்ந்து கொண்டது. ஓலமும் ஒப்பாரியும் தாயகத்திலும் ஒலித்தது. இதனால் அதிர்ச்சியுற்று பயமும் விரக்தியும் கொண்டவர்களாக, எதிர்கால நம்பிக்கையற்றவர்களாக நலன்புரி நிலையங்களில் முடங்கினர் எம் மக்கள்.

இம் மக்களை மீள் கட்டுமானப் பணிகளில் எவ்வாறு ஒன்று சேர்ப்பது, பங்குகொள்ளவைப்பது ஊர் முன்னேற்றத்திற்காக உழைக்கக் கூடியவர்களாக உருவாக்குதல் அவர்களின் சுமைகளில் இருந்து பயம் களைந்து நம்பிக்கையும் விடுதலை வேட்கையும் கொண்ட செயற்பாட்டாளர்களாக பலம் சேர்க்க யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் பாடத்தைச் சேர்ந்த (தர்மலிங்கம், தேவி முகுந்தன், சுதாகரன், அருள்குமரன், உதயசீலன், சுரேந்திரன், செல்ரன், டிலானி, லகுஷா, தட்சாயினி) தெருவெளி அரங்கக் குழுவினருடன் இணைந்து அரங்க செயற்பாட்டுக் குழுவினரும் களம் இறங்கினர்.

சுனாமியின் தாக்கத்திற்கு உள்ளான நாளில் இருந்து அவர்கள் பாதிக்கப்பட்டோருக்கு அருகில் சென்று கதை கேட்டனர். நலன்புரி நிலையத்தில் ஆடினர், பாடினர்.... உறவினராகினர். அவர்கள் மீள ஊர் சென்ற போதும், இடைத்தங்கல் முகாம்களில் இருப்புக்கொண்ட போதும் அவர்கள் ஊர் தேடிச் சென்று அவர்களின் சுமைகளில் பங்குதாரராகினர். தாம் விரும்பும் அந்த சமூக மாற்றத்தினைத் தமது பாடத்திட்டத்தின் ஒரு பகுதியான அரங்க செயற்றிட்டத்தில் (Theatre progect) பிரியோகம் (Applied theatre) செய்தனர் தமது படிப்பையும், விருப்பையும், ஆர்வத்தையும் அர்ப்பணம் செய்தனர்.

சுனாமியின் தாக்கத்துக்குள்ளான வடமராட்சியின் கரையோரமெங்கும் உறவின் பலத்தில் எல்லா இளைஞர்களையும் ஒரே பலம் சேர்க்க ஆண்களுக்கான அரங்காலயத்தினை ஒழுங்கு செய்தனர். தெருவெளி அரங்கக் குழுவினர்.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. கோவில்களில் ஊர்கூடி ஒன்று சேர்ந்து தம் உணர்வுகளை பகிர்ந்து பலம் பெறுவது எமது பாரம்பரியம். இன்று அந்த வேளையை அரங்கும செய்கின்றது. ஊர் ஊராக அரங்குகளை நடாத்தும் போது மக்கள் ஒன்றுகூடுகிறார்கள்... ஆடுகிறார்கள்... பாடுகிறார்கள்... ஆற்றுகை செய்கிறார்கள்... அதன் மூலம் ஒருவரை ஒருவர் அறிந்து புரிந்து உறவு கொண்டு மனித உறவுகளைக் கட்டியெழுப்பும் இடமானஅரங்கு விளங்குகின்றது.

இங்கு அரங்கு ஆலயமாக உள்ளது. எல்லோரும் ஒன்று கூடி தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தி உணர்வுகளைப் பரிமாறி சிந்தனை ஒருமைப்பாட்டைச் சாதிக்கின்ற வேகம் கொண்டெழும் சக்திபிறக்கும் இடமே அரங்காலயம். இந்த அரங்காலயம் தொடர்ந்து ஊரூராய் உயிர்ப்பெற்று வருகின்றது.

அண்மையில் பருத்தித்துறை முனை கடற்கரையோர மண்டப வெளியில் நிகழ்ந்த அரங்காலயத்தில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறைத் தலைவர் Dr.க.சிதம்பரநாதன், பொருளியல் துறைத் தலைவர் பேராசியர் சு.நித்தியானந்தன் வணிகத்துறை விரிவுரையாளர் திரு. சிவராஜா, யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், அரங்க செயற்பாட்டுக் குழு எனப் பலரும் பங்கு கொண்டு அச் சமூகத்திற்குப் பலம் கொடுத்தனர்.

இங்கு பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் வி.நித்தியானந்தன் பேசுகையில்,

"நாங்கள் பலதரப்பட்ட இடங்களில் இருந்து வந்தாலும் வித்தியாசம் இன்றி எல்லோருடனும் இணைந்து விளையாடி ஆடியமையினால் ஒரு குடும்பம் என்ற உணர்வைப் பெற இந்த அரங்காலயம் ஓர் நல்ல சந்தர்ப்பம். இந்த மண்டபத்தில் காண்பியங்களாக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வாக்கியங்களும் உங்களின் உறுதியைக் காட்டுகின்றது.

"கடல் கோள் எம்மைக் கொண்டது மீண்டும் கடலை நாம் கொள்வோம்'' உங்கள் வாழ்க்கை பற்றிய குறிக்கோளில் நீங்கள் உயிர் பெற்றிருப்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளீர்கள். சுனாமி வந்து ஒன்று இரண்டு நாட்களில் நான் இப் பிரதேசத்திற்கு வந்தேன்.

இந்தப் பாதையால் வரமுடியாத அளவுக்கு இருந்தது. இன்று இந்த இடம் இது தானா என்று எண்ணத்தோன்றுகின்றது. அவ்வாறு உங்களால் இயன்றளவு இந்த இடத்தை மாற்றியது உங்களின் சாதனை.

'சுனாமியில் இருந்து மீள எழும்பி கடலிட்டையே எடுப்பம்' என்ற உறுதி மட்டும் போதாது. எப்படி வாழலாம் என்பது தான் இன்று நாம் கொள்ளும் முக்கிய பிரச்சினை. 'என்னதான் சுனாமி வந்தாலும் அழித்தாலும் இது எங்கட நிலம். இதைவிட்டு எங்கையும் போகமாட்டம்'' என்ற உறுதியை இந்த அரங்காலய ஆற்றுகையில் வெளிக்காட்டியுள்ளீர்கள். இது தான் தேவை. இந்த அரங்கு உங்கள் மனதில் சில செய்திகளைத் தருகின்றது. நீங்களும் அவர்களும் சேர்நது ஒரே உறவாக கூடி செயற்படுகின்றீர்கள். இந்த ஒன்று கூடலே ஒரு பலம் தரும் சக்தியாகும்.

விளையாட்டுக்களுடன் ஆரம்பமாகி பாடலாகி, ஆடலாகி, ஆற்றுகையாகப் படிப்படியாக செயற்பட்டுக் கொள்ளும் நிலையில், நாம் தனியே நிற்கின்றோம் என்ற சிந்தனை விடுவிக்கப்படுகின்றது. இவ்வாறு ஒன்றாக பலம் கொள்வதே நாம் சுனாமியின் தாக்கத்தில் இருந்து விடுபடுவதற்கான வழியாகும்.

இன்று உதவிகள் வழங்கவென வெளிநாடுகள் முன்வந்தாலும் தமிழர் பிரதேசங்களுக்கு அவை எவ்வளவு என்பதில் பூரண நிலையில்லை. எந்த உதவிஆனானாலும் எமக்கு எதனால் நன்மை உண்டு என்பதைக் கண்டு நாம் உதவிகளைப் பெறுவது அவசியம்.

உதாரணமாக,

இன்று உங்கள் பகுதியில் "எல்லோருக்கும் வள்ளம் கிடைத்த பின்பு தொழில் செய்வோம்'' என்ற ஒருமித்த உறுதியானது, எமது சமூகத்தை ஒன்றாக உயர்த்திவிடும். இந்த ஒருமித்த உறுதிதான் இன்று நாங்கள் அடுத்த அடியை எடுத்துவைக்க பலமாக இருக்கும்.

நாம் இயற்கை வளங்களையும் மனிதவளங்களையும் இணைக்கும் போதுதான் விருத்திவரும். போரின் மத்தியில் 'இடைக்கால நிர்வாகம்' கேட்டோம். இன்று புது வடிவில் வந்த சுனாமியின் அழிவுகளிலிருந்து மீள "பொதுக்கட்டமைப்பை'' வலியுறுத்துகின்றோம்... இவைகளினூடே எதிரி எம்மை ஒன்று திரளவிடாமல் எம்மத்தியில் போட்டிகளை ஏற்படுத்தி எம்மைக் குழப்பிவிடுகின்றான்.

இதை நாம் தெளிவாக விளங்கி இவ் விடத்தில் ஒற்றுமையை வெளிகாட்டியமாதிரி, முழுசமூகமும், இணைந்து எமது அடிமன விருப்பை வெளிக்காட்டி எல்லோரும் ஒரே தரத்தில் வாழக் கூடிய நிலைமையினை ஏற்படுத்த வேண்டும். எமது தாயக வளங்களையும் வேறு மூலதனங்களையும் பெற்றுப் பங்கிட்டு ஒற்றுமையாகவும் உறுதியாகவும் வாழ்வதன் மூலம் நாம் ஓர் புதிய சமூகமாக சாதனை படைக்க முடியும் என்றார். (ற)

## கிராமிய எழுச்சித் திட்டம்

(கொழும்பு)

14 ஆயிரம் கிராமிய எழுச்சித் திட்டங்களை ஆராய்வதற்கு சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இன்றுமுதல் இத்திட்டம் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை உட்பட 22 மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படவுள்ளதாக சமுர்த்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

கிராமிய பொருளாதார வறிய மக்களின் அபிவிருத்திக்கு நேரடி உதவிகளை வழங்குவதற்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தவே இந்தப் புதிய கிராமிய எழுச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை பாலர் பாடசாலையின் விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் பாலர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு யாழ்.மாநகர சபைச் செயலாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசாவும் ஓய்வுபெற்ற அதிபர் திருமதி க.குணராசாவும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி.ரவீந்திர சர்மா, அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாகக் கிராமசேவையாளர் இ.சந்திரகுமார், நல்லூர் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள், நல்லூர்ப் பொதுச் சுகாதாரபரிசோதகர் முகுந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். இந நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்கவுள்ளதுடன் பிரதம, சிறப்பு விருந்தினர் உரைகளும் இதில் இடம்பெறவுள்ளது. (ற-19)

# கொத்தமல்லி வாங்கும் சக்திகூட பட்டதாரிகளிடம் இருந்ததில்லை

## நீதி அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் ஆட்சிக் காலத்திலேயே பட்டதாரிகளுக்கு அரச சேவைகளில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது என்று நீதி மற்றும் நீதித்துறை மறுசீரமைப்பு அமைச்சர் டபிள்யூ.டி.ஜே செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 28 பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனம் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கொத்தமல்லி வாங்கும் சக்தி கூட பட்டதாரிகளிடம் இருந்ததில்லை. இவர்கள் சமூகத்தின் சுமைகளாகவே கருதப்பட்டனர்.

இதனை நிவிர்த்திக்கும் வகையிலேயே இப்போது 28 பட்டதாரி பயிலுநர்களுக்கு நீதி அமைச்சின் கீழ் உள்ள இணக்க சபைகளில் உதவி நிகழ்ச்சித் திட்டமிடல் அதிகாரிகளாக சேவையாற்ற நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இச் சபையின் நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காகவே மேற்படி நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது.

நீதி மற்றும் நீதித்துறை மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் நியமனம் வழங்கப்படவிருந்த ஏனைய பட்டதாரி பயிலுநர்களுக்கும் மிக விரையில் நியமனம் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

## க.பொ.த.சாதாரணதர மாணவருக்கு

# முன்னோடிப் பரீட்சை நடத்த பரீட்சைத் திணைக்களம் தீர்மானம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக இவ்வருடம் முன்னோடிப் பரீட்சை ஒன்றை நடத்துவதற்குப் பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிாவரும் 30ஆம் திகதி இந்த முன்னோடிப் பரீட்சை இடம்பெற உள்ளதாக பரீட்சை ஆணையாளாா நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித துள்ளார்.

கணிதப் பாடத்துக்காக மாத்திரம் இந்த முன்னோடிப் பரீட்சையை நடத்துவதற்குத் பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அடுத்த வருடம் முதல் அனைத்துப் பாடங்களுக்குமான முன்னோடிப் பரீட்சைகள் நடத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட உளளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பல்வேறு விடயங்களைக் கருததில் கொண்டு அறிமுகப்படுத்தப்படும் இந்த முன்னோடிப் பரீட்சையின் புள்ளிகள் கல்விப் பொதுத்த்ராதர சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகளுடன் சேர்க்கப்படாது எனவும் எதிரிசிங்க குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பாடவிதானம் தொடர்பாக மாணவர் மத்தியில் நிலவும் ஐயங்களை போக்குவதே இந்த முன்னோடிப் பரீட்சை நடத்துவதன் முக்கிய நோக்கமாகும்.

பரீட்சைகளை நடத்துவதற்கு பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நீக்குவதும் இந்த முன்னோடிப் பரீட்சைகளின் மற்றுமொரு நோக்கம் என்றும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-2)

## சிறைவைக்கப்படவிருந்த

# 1300 பேர் சமூக சீர்திருத்த செயற்பாடுகளில் ஈடுபட்டனர்

(கொழும்பு)

சிறைவைக்கப்படவிருந்த ஆயிரத்து 300 பேர் கடந்த 6 மாதங்களுக்குள் சமூக சீர்திருததச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இவர்களில் 540 பேர் சமூக மறுசீரமைப்புக் கடமைகளைப் பெற்றுக்கொண்டு விடுதலையாகி சென்றுள்ளதாக சமூக சீர்திருத்த ஆணையாளர் ஆர்.விமலரத்தின தெரிவித்துள்ளார்.

சிறு குற்றங்களுக்காக சிறிய அளவிலான தண்டப்பணத்தைச் செலுத்த முடியாமையினாலேயே இவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறானவர்கள் சிறைவைக்கப்படுவதனால் அவர்களின் குடும்பக்கட்டமைப்புக்குள் ஏற்படும் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று சமூக சீர்திருத்த ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று சிறைச்சாலைகளில் காணப்படும் இட நெருக்கடியை குறைத்துக் கொள்ளும் சிறைச்சாலையிலுள்ள காலப்பகுதியில் அவர்களுக்கு அரசாங்கம் செலவிடும் நிதியின் அளவை குறைத்துக் கொள்ளுவதுமே சமூக மறுசீரமைப்புத்திட்டத்தின் மற்றுமொரு நோக்கம் என்று தெரிவித்தார்.

ஒரு சிறைக்கைதிக்கு அரசாங்கம் நாள் ஒன்றிற்று 260 ரூபாவை செலவிடுகின்றது. தற்போது 10 நீதிமன்றங்களில் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டம் 35 பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் நீதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பு ; விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளிவந்த 2005 /4 இலக்கமுடைய இலங்கை ஆசிரியர் சேவையில் ஆசிரியர்களை உள்வாங்குதல் தொடர்பான சுற்றுநிருபத்திற்கு அமைவாக விண்ணப்பப் படிவங்கள் சகல கல்வி வலயங்களிலும், கல்விக் கோட்டத்திலும் விநியோகிக்கப்படுகின்றன.

சேவையில் உள்ளவர்களும் 6.10.94க்கும் 31.12.2004 காலப் பகுதிக்கும் இடையில் ஓய்வு பெற்றவர்களதும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அதனைப் பூரணப்படுத்தி இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தங்களுக்குரிய கல்வி வலயங்களில் ஒப்படைக்க வேண்டும் என மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிகச் செயலாளர் க.பொன்னம்பலம் அறிவித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார். (ற-19)

### பாகிஸ்தானில் பயங்கரம்

# மூன்று ரயில்கள் மோதல் உயிரிழப்பு 350 ஆக உயர்வு



(பாகிஸ்தான்)

பாகிஸ்தானின் தென்பகுதியான சிந்து மாகாணத்தின் கோத்கி என்ற இடத்தில் நேறறு முன்தினம் அதிகாலை 3 பயணிகள் ரயில்கள ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக் குள்ளானதில் 250 பேர் வரை ஸ்தலத் திலேயே பலியானதுடன் சுமார் 1300க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

இந்த ரயில் நிலையத்தில் குவைத் தார் கடுகதி ரயில் வண்டி தரித்து நின்ற சமயம் லாகூரில் இருந்து சென்ற மற்று மொரு கடுகதி வண்டி குவைத்தார் ரயிலு டன் மோதிய சில நிமிடங்களில் கராச்சி யில் இருந்து எதிர்த்திசையில் வந்துகொண டிருந்த ரயில் வண்டி இந்த இரண்டு ரயில் வண்டிகளுடனும் மோதியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் தகவல் வெளியிடு கையில்,

250 சடலங்களைத் தாங்கள் கண் டெடுத் துள் ளதாகவும், காயமடைந்தவர்களில் மேலும் 100பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் இறந்தவர் களின எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் தெரிவித்துள்ள னா. சம்பவ இடத்திற்கு உயரதிகாரிகள விரைந்துள்ளனர். துரிதகதியில் மீட்புப பணிகள் இடம்பெற்று வருகின்றன.

3 ரயில் வண்டிகளிலும் இணைககப் பட்டிருந்த 19 பெட்டிகள் மிகவும் சேதம டைந்துள்ளன. இந்நிலையில் 2கடுகதி ரயில் வண்டிகளை ஒரே பாதையில் செல்ல எப்படி அனுமதிகக முடியும்? என்று பல தரப்பினரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அதேசமயத்தில் எதிர்த்திசையல் கராச்சியில் இருந்து அதே பாதையில் மற்றொரு ரயில் வண்டி வருவதற்கும் எந்தவித காரணமும் இல்லை என்றும் சுட்டிககாட்டப்படுகிறது.

இவ் விபத்துக்கான காரணம் பற்றி உடனடியாக எதுவும் கூறமுடியாது எனறு தொழிலநுட்ப கோளாறு, ரயிலவே கட டுப்பாட்டு நிலைய அதிகாரிகளின் கவன யீனம் என்பன பற்றி கவனம் செலுததப் படும் என்றும் உயர் அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். (ற-2)

# லெபனான் துணைப் பிரதமர் மீது கார்க்குண்டுத் தாக்குதல்



(பெயருட்)

லெபனான் துணைப் பிரதமர் மீது கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் அவர் தெய்வா தீனமாக காயங்களுடன் உயிர் தப்பினார்.

லெபனானில் கடந்த பெப்ரவரி மாதம முன்னாள் பிரதமர் ரபீக் ஹரீரி காரில் செல்லும்போது வெடிகுண்டு வீசி கொல் லப்பட்டார். ஆளும் கட்சிதான் இதற்குக காரணம் என்று எதிர்க்கட்சிகள் புகார் கூறி வந்தன. சிரியாவுக்கு ஆதரவாக லெபனான் அரசு செயல்பட்டு வந்தது.

இந்த நிலையில் சமீபத்தில் லெபனா னில் நடந்த தேர்தலில் எதிர்க்கட்சி வெறறி பெற்றது.

இதைத்தொடர்ந்து ஆட்சியில் இருந்த மந்திரிகள் இராஜினாமா செய்து வரு கிறார்கள். துணைப் பிரதமர் எலியாஸ் மூர் என்பவரும் பதவி விலகுகிறார்.

இந்த நிலையில் சிரியாவுக்கு ஆத ரவாக செயல்பட்டவர்கள் மீது புதிதாக ஆட்சிக்கு வந்தவர்கள் தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளனர்.

பதவி விலகிச் செல்லும் துணைப் பிர தமர் எலியாஸ் மூர் மீது கார்க்குண்டுத் தாக்குதல் நடந்தது. பெயருட் நகரில் அவர் காரில் செல்லும் போது அவரது கார் மீது வெடிகுண்டு நிரப்பப்பட்ட கார் மோதியது. இதில் எலியாஸ் கார் உருண் டது.

கார்க் குண்டு வெடித்ததில் துணைப் பிரதமர் எலியாஸ் காயமடைந்தார். பாது காப்புக்கு அவருடன் சென்றவர்கள் அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். இந் தக் குண்டு வெடிப்பில் ஒருவர் பலியா னார். மேலும் 6 பேர் காயம் அடைந்தனர்.

எலியாஸ் மூர் லெபனானின் இராணுவ மந்திரியாகவும் இருந்தவர். இவர் அதிபர் எனமல் லகூடத்தின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# அமெ.வின் உதவியை கியூபா நிராகரிப்பு

(ஹவானா)

'டென்னிஸ்' என்று பெயரிடப்பட்ட சூறா வளிக்காற்று கடந்த வெள்ளிக்கிழமை கியூபா நாட்டில் மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தியது. இதில் 10 பேர் இறந்தனா. நூறறுக்கணக்கான வீடுகள் சேதமடைந் தன. ஏராளமான நிலங்களில் பயிர்கள் அழிந்தன.

இதனையடுத்து அவசர உதவிக்காக இருக்கட்டும் என்று பக்கத்து நாடான அமெ ரிக்கா 22 கோடி ரூபாயை அளிக்க முன் வந்தது. அந்த உதவி வேண்டாம் என்று கூறிவிட்டது கியூபா. பொது உடைமைச் சிந்தனையைக் கொண்ட கியூபா, சித் தாந்த ரீதியாக அமெரிக்காவைக கடு மையாக எதிர்த்து வருகிறது. இரு நாடுக ளுக்கும் இடையில் 40 ஆண்டுகளாகத் தூதரக உறவு கூட கிடையாது.

ஆயினும், கியூபாவில் இப்படி இயற்கை இடர்பாடுகள் ஏற்படும்போதெல்லாம் அமெ ரிக்கா உதவி செய்ய முன்வருவதும் கியூபா அதை நிராகரிப்பதும் தொடர்கதையாகி விட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)




நடிப்பில் ஆர்வ மிக்க, திறமையான இளம் நடிகர்களை கண்டறய, 'ஸ்டார் 2006' என்ற நிகழ்ச்சியை மும்பையில் நடிக்க பத்மனி கோலாபுரி நடத்தினார். நடிகை ஸ்ரீதேவியும் அவருடைய கணவர் போனி கபூரும் நிகழ்ச்சிக்கு வந்து பத்மினியை வாழ்த்தினர்.

### அரபாத் மரணத்தில் மர்மம்;

# விஷம் வைத்துக் கொன்றதாக பரபரப்பு குற்றச்சாட்டு

(டுனிஸ்)

பலஸ்தீனத் தலைவர் யசீர் அர பாத்தை விசம் வைத்து இஸ்ரேல் கொன்று வட்டதாக பல்ஸ்தீன இயக்கமான படாவின் தலைவர் பருக் கடுமி குற்றம் சாட்டி யுள்ளார்.

அரபாத் விஷம் வைத்துத்தான் கொல் லப்பட்டார் என்பதை என்னால் நிச்சயமாக உறுதிப்படுத்த முடியும் என நிருபர்களிடம் கடந்த திங்கட்கிழமை கூறினார் பருக்.

பலஸ்தீனத்திலிருந்து நாடு கடத்தப் பட்டவர் பருக் என்பது குறிப்பிடத்தக்கது. அரபாத்தின் மறைவுக்கு பிறகு அந்த இயக கத்துக்கு தலைமை தாங்கி நடத்தி வரு கிறார்.

கடந்த 2004ஆம் ஆண்டு நவம்பரில் பரீஸில் இராணுவ மருத்துவமனையில் அரபாத் இறந்ததாக அறிவிக்கப்பட்டது. அதற்கு முன் இரு வாரங்களாக சிகிச்சை பெற்றுவந்தார் அரபாத்.

பிரான்ஸில் மருத்துவ இரகசிய விதி முறைகள் கடுமையானவை. இதையடுத்து அரபாத்தின் மரணத்துக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. எனினும் அரபாத் தின் உறவினரிடம் அது தொடர்பாக ஆவ ணங்கள் உள்ளன.

75வயதில் அரபாத் மரணமடைந்தாலும அது இயற்கையானதல்ல என பலஸ்தீனர் கள் நம்புகின்றனர். அரபாத்துக்கு விஷம வைக்கப்பட்ட அறிகுறிகள் இருந்ததாக அவருக்கு 20ஆண்டுகளுக்கும் அதிகமாக சிகிச்சை அளித்த டாக்டர் அஷ்ரப் அல்-குர்தி கூறியுள்ளார் எனத் தெரிவித்தார் பருக்.

உணவிலும் மருந்திலும் விஷம் வைக் கபபட்டதாகவும் அவர்கூறினார். பலஸ் தீன சுகாதாரததுறை அமைச்சர் தெஹ்னி அல் வாஹிதி, துனிஷியாவுக்கு வந்து அரபாத துககு சிகிச்சை அளித்த டாக்டர்களைச் சந்தித்ததாகக் கூறிய பருக் அரபாத்தின உடல்நிலை மோசமான உடனேயே சிகிச்சை அளிக்க விரைந்ததாகக் கூறினார். ஆனால் எவ்வித விவரத்தையும் வெளியிடாமல் மௌனமாக டாக்டர்கள் இருந்து வருவ தாகக் கூறினார் பருக். (ற)

WORLD NEWS உலக தரிசனம்

### பொலிஸாருக்கு இரகசியத் தகவல்

# இலண்டனில் மீண்டும் குண்டு வெடிக்கும்! முக்கிய இடங்களுக்கு பலத்த பாதுகாப்பு



(இலண்டன்)

இலண்டன் நகரில கடந்த வியாழக்கிழமை சுரங்க ரெயில்களிலும், மாடி பஸ்சிலும் தீவிரவாதி கள் நடத்திய வெடிகுண டுத் தாக்குதலில் பலியா னவர்களின் எண்ணிக்கை 52ஆக உயர்ந்துள்ளது.

இடிபாடுகளில் மேலும் உடல்கள் சிக்கி உள்ளன. 700க்கும் மேற பட்டவர்கள் இதில் காயம் அடைந்தனர்.

அல்-கெய்டா தீவிர வாத அமைப்பு இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்பதும் விசாரணை யில் தெரியவந்தது.

வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தியவா கள் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத் தவில்லை என்று முதலில் பொலிஸார் தெரிவித்தனர். ஆனால் தீவிரவாதிகள் தற் கொலைப்படைத் தாக்குதல் நடத்தியிருப் பதாக பொலிஸார் இப்போது கூறுகின் றனர். தாக்குதல் நடத்திய 4 தீவிரவாதிகளும் பலியாகிவிட்டதாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

தீவிரவாதிகள் இலண்டன் நகருக்குள் ஊடுருவியதை இரகசிய கமரா பதிவு செய் துள்ளது. குண்டுவெடிப்புக்கு முன் அந்த 4 பேரும் இலண்டன் நகரில் சந்தேகப் படும்படி அங்குமிங்கும் நடமாடியதாகவும இதற்கு முன் அவர்களை அங்கு பார்த் ததே இல்லை என்றும் ரயில் நிலைய ஊழியர்களும், வேறு சிலரும் தெரிவித் துள்ளனர்.

தற்கொலைப்படைத் தாக்குதல் நடத் தியவர்களில் ஒருவன் பெயர் ஹாசிஷ் உசேன்(வயது19). இன்னொருவன் பெயர் செஷாகத்தன் வீர். பாகிஸ்தானைச் சேர்ந்த இவர்கள் இலண்டனில் படித்த வர்கள். லீட்ஸ் நகரில் தங்கியிருந்த இவர் கள வெடிகுண்டு நிரப்பிய காரில் இலண் டனுககு வந்துள்ளனர்.

மற்ற 2 தீவிரவாதிகளின் பெயர் விவரம் இன்னும் கண்டு பிடிக்கப்பட வில்லை. வெடிகுண்டு ஏற்றி வந்த காரை யும இலண்டன் பொலிஸார் இப்போது கைப்பற்றி உள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின அடிப்படையில் லீட்ஸ் நகரிலும், யார்க ஷைர் நகரிலும் பொலிஸார் வீடுவீடாக சோதனை நடத்தினார்கள்.

இந்தப் பகுதியில் முஸ்லிம்கள் அதிகமாக வசிககிறார்கள். இந்தச் சோதனையில் சதி கும்பலுடன் தொடர் புடைய ஒரு வாலிபரை பொலிஸார் கைது செய்தனர். விசாரணைக்காக அவனை பொலிஸார் இலண்டன் கொண்டு சென் றுள்ளனர்.

பலியான தீவிரவாதிகளில் ஒருவனின் டிரைவிங் லைசென்சும் பொலிஸாருக்கு கிடைத்துள்ளது.

இந்த நிலையில், இலண்டனில் மீண்டும் குண்டு வெடிக்கும் என்று பொலி ஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத் ததை தொடர்ந்து முக்கிய இடங்களுக்கு இதுவரை இல்லாத அளவுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (ற)

# ஈராக்கிலிருந்து படை வாபஸ்?

### பென்டகன் நிராகரிப்பு

(வோஷிங்டன்)

ஈராக்கில் தேவைப்படும் வரை அமெ ரிக்க இராணுவம் இருக்கும் என்று அமெ ரிக்க இராணுவத் தலைமையகமான பென் டகன் தெரிவித்துள்ளது. படைகளுக்கு எதிராக தீவிரவாதிகள் கடும் தாக்குதல் நடத்துகின்றனர்.

வீரர்களின் உயிரிழப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டிருக் கிறது. இதனால் 2006 ஆம் ஆண்டுக்குள இராணுவத்தின் ஒரு பகுதியை வாபஸ் பெற அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என ஈராக்கில் முகாமிட்டுள்ள அமெரிக்க இரா ணுவ அதிகாரிகள் கூறி வருகின்றனர்.

ஆனால் அமெரிக்க இராணுவத் தலைமையகமாக பென்டகன் இதை மறுத்துள்ளது.

பிரிட்டனில் வெளியாகும் மெயில் பத் திரிகைக்கு பென்டகன் தகவல் தொடர் பாளர் பிரைன் ஒயிட்மேன் அளித்த பேட்டி யில்,

ஈராக்கில் இருந்து படையை வாபஸ பெறுவது தொடர்பாக இதுவரை உறுதி யான முடிவு எடுக்கப்படவில்லை. ஈராக் கின் பாதுகாப்பு, அரசியல் மற்றும் பொரு ளாதார சூழ்நிலையை பொறுத்தே படை வாபஸ் அமையும் என்று தெரிவித்துள் ளார். (ற)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை

பி.ஜே.ராஜய்யா

## 3 ஆடு மேய்த்தான்



சிறுவன் சதாமை பார்க்கும் போதெல்லாம் நஞ்சைக் கண்டது மாதிரி இருக்கும் சுபாவின் கணவன் ஹசன் அல்-இப்ராகிமுக்கு.

இப்ராகிம் படிப்பு வாசனை அறியாதவன். வறுத்தெடுக்கும் வெயிலில் வதங்கின மாதிரி சதா வறட்சியாய் காட்சியளிப்பான். ஒல்லியாய் நெடுநெடுவெ வளர்ந்திருப்பான். முரட்டுத்தனம் அவன் கூடப் பிறந்தது. போதாக்குறைக்கு குடிப்பழக்கம் வேறு. இரவு-பகல் எந்நேரமும் போதையில் மிதப்பான். குடிவெறியைத் தணிக்க கண்ட தையும் குடித்ததில் இந்த இளவயதிலேயே அவனுக்கு கண்பார்வை மங்கிவிட்டது. அதனால் கனமான சோடாப்புட்டி கண்ணாடி அணிந்து அதன் வழியே உலகைப் பார்ப்பான். சொந்தமாய் கொஞ்சம் ஆடுகள் வைத்திருக்கிறான். அவற்றை மேய்த்து விற்று -பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கிறான். கல்யாணம் ஆகாமலே வேறொருவனுக்கு பிள்ளை பெற்ற சுபாவை மனைவியாக ஏற்றுக்கொண்ட போதிலும், அந்த வேறொருவனின் பிள்ளையான சதாமை ஏற்றுக்கொள்ள அவன் மனம் ஒப்பவில்லை. வெறுத்தான். திட்டித் தீர்த்தான். அடித்துத் துவைத்தான். சிறுவ னென்றும் பாராமல் கொடுமைப்படுத்தினான்.

"பிற்காலத்தில் எதிரிகளையும், துரோகிகளையும் சதாம் ஈவு இரக்கமின்றி கொன்றொழிக்கும் கொடூர மனம் கொண்டிருக்கக் காரணம், சிறுவயதில் தனது 'வளர்ப்புத் தந்தை' இப்ராகிமிடம் அனுபவித்த கொடுமைகளும் சித்திரவதைகளும் சதாமின் ஆழ் மனதில் அழுத்தமாய் பதிந்து போனது தான்'' என்பது உளவியலாளர்களின் அனுமானம்.

.... ஒவ்வொரு நாள் காலைப்பொழுதும் இப்ராகிமின் உதையுடன் தான் விடியும். சிறுவன் சதாமுக்கு, கிழிந்த துணி விரிப்பில் அமைதியாக தூங்கிக்கொண்டிருக்கும் சதாமை அடித்து, காலைப்பிடித்து தரதரவென இழுத்து எழுப்புவான் இப்ராகிம். "எந்திரிடாதே...யா மகனே! கிளம்பி ஆடு மேய்க்கப் போ'' என்று வள்ளென விழுவான்.

விவரம் புரியாத அந்த சிறு வயதில் சதாம் அழுதுகொண்டே ஆடுகளை ஓட்டிக்கொண்டு மேய்க்கப் போவான். பெற்ற தாயும், அவளது கணவனும் தன்னைக் கேவலமாக நடத்துவது கண்டு ரணமாகிப் போகும் சதாமின் உள்ளம். "நம்ம அப்பா மட்டும் இருந்திருந்தா?'' ஏக்கம் கனவாய் கசியும், விழியோரம் நீராய் நிறைக்கும்.

இப்ராகிமுக்கு கொஞ்சம் திருட்டுப்புத்தி உண்டு. குடிக்க கையில் காசில்லாவிட்டால் அவன் சதாமை அழைத்து, அடுத்தவன் வீட்டுக்கோழி அல்லது ஆட்டை சத்தமின்றி அபேஸ் பண்ணி வரச்செய்வான். அதை பக்கத்து ஊருக்கு எடுத்துச் சென்று, விற்று காசாக்கிக்கொள்வான்.

இப்ராகிமின் கொடுமைக்குப் பயந்து ஆடு மேய்ப்பதும், திருடிக்கொண்டு வந்து கொடுப்பதும், மிஞ்சிய நேரம் சித்திரவதை அனுபவிப்பதுமாய் குமுறலுடன் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த சதாமுக்கு ஒரு தகவல் கிடைத்தது.

"கைருல்லா மாமா ஜெயிலில் இருந்தாலும்; அவரது மகன் அட்னன், அவனுடைய அம்மா வின் ஊரில் பள்ளிக்கூடத்தில் படிக்கிறானாம்'' என்பது தான் அது.

அந்த ஊருக்கு போய் வந்த உறவினர் ஒருவர் சொன்ன இந்தத் தகவல் காதில் விழுந்த திலிருந்து "அட்னன் மாதிரி நானும் பள்ளிக்கூடம் போகணும். படிக்கணும் எழுதணும்!'' என்ற ஆசை பிறந்தது சதாமுக்கு.

அல்-அவ்ஜாவில் பள்ளிக்கூடம் இல்லை. நான்கு மைல் தொலைவில் உள்ள திக்ரித் நகரத்தில் தான் இருக்கிறது. அல்-அவ்ஜா கிராமத்துச் சிறுவர்கள் தினமும் அங்கு போய்த் தான் படித்து வருகிறார்கள்.

காலையில் டைக்ரிஸ் நதிக்கரையோரம் சதாம் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் போது அந்த சிறுவர்கள் செட்டாக கிளம்பி, திக்ரித் செல்லும் வண்டிப்பாதையில் நடந்து போவார்கள். மாலையில் அவன் இன்னும் ஆடு மேய்த்துக்கொண்டிருக்கையில் அவர்கள் பள்ளிக்கூடம் முடிந்து ஊர் திரும்புவார்கள். அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் சதாமுக்கு அட்னன் ஞாபகம் வரும். கூடவே 'படிக்கணும்' என்ற ஏக்கம் எழும்.

ஒருநாள் காலை ஆடுகளை ஓட்டிப்போய் வண்டிப்பாதையோரம் மேயவிட்டுட்டு அந்த சிறுவர்களின் வருகைக்காகக் காத்திருந்தான் சதாம். அவர்கள் வந்ததும் வழிமறித்தான். தன் ஏக்கத்தை வெளியிட்டான். அதைக்கேட்டு நக்கலாய் சிரித்தார்கள் சிறுவர்கள்.

அவமானத்தில் சதாமின் மனமும் கண்களும் கலங்கின. அடுத்த கணம் ஆசை, வைராக் கியமாய் வலுப்பெற்றது. வீட்டுக்குப் போனதும் தன் ஆசையைத் துணிந்து வெளியிட்டான்.

இப்ராகிமுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. "நீ படிச்சு என்ன கிழிக்கப் போறே? ஆட்டை ஒழுங்கா மேய்ச்சுக்கிட்டு சும்மா கிட'' என்று கத்தினான். சுபாவும் ஒத்து ஊதினாள்.

மறுநாள் காலை. சதாமை உதைத்து எழுப்பி, 'ஆடு மேய்க்கப்போ' என்று விரட்டினான் இப்ராகிம். சதாம் அவனை முறைத்துப் பார்த்தான். "நான் இனிமே ஆடு மேய்க்கப் போக மாட்டேன். போ'' என்று உறுதியுடன் சொல்லிவிட்டு விருட்டென்று எழுந்து வீதியில் போய் நின்று கொண்டான்.

"டேய், திமிரா? சொன்னா கேக்க மாட்டே?'

'சும்மா கத்தாதே! அதுக்கு வேற ஆளப் பாரு' என்று நெஞ்சை நிமிர்த்தினான் சதாம்.

'என்னடா சொன்னே?' என்றவாறு அடிக்க அவனை நோக்கி ஓடி வந்தான் இப்ராகிம். சதாம் சட்டென குனிந்து, பெரிய கல் ஒன்றை இரண்டு கைகளாலும் தூக்கி, தலைக்கு மேல் உயர்த்திப் பிடித்துக்கொண்டு ஆவேசமாய் கத்தினான். "கிட்டவராதே! வந்தேன்னா, கல்லப் போட்டு கொன்ருடுவேன்...'' 'பையன் மிஞ்சிவிட்டான்' என்ற பயத்தில் இப்ராகிம் உறைந்து நின்றான். சுபாவுக்கு ரத்தம் கொதித்தது. "அப்படியே ஓடிப்போயிடு. இனிமே வீட்டுக்குள்ள வந்தா காலை வெட்டுவேன்'' என்று மிரட்டலாய் எச்சரித்தாள். அன்று அந்த வீட்டை விட்டு வெளியேறியவன் தான். அதன் பிறகு சதாம் எந்த சூழலிலும் அதற்குள் காலடி எடுத்து வைத்ததில்லை.

ஊருக்குள் நிறைய சொந்தக்காரர்கள் இருந்தார்கள். அவர்களில் யாராவது ஒருவர் அடைக்கலம் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தான். ஆனால் வறுமைச்சுமை காரணமாகவும், சதாம் முறைகேடாக பிறந்த பிள்ளை என்கிற அருவருப்பிலும் எல்லா வீட்டுக் கதவுகளும் அவன் முகத்தில் அறைந்தாற்போல் மூடிக்கொண்டன.

சொந்த ஊரில் அகதி ஆனான். வீதியில் அலைந்தான். வீதியில் படுத்தான். வீதியோரச் சிறுவன் ஆனான்.

(தொடரும்)

# முப்படையினருக்கும் நஷ்டஈடு இரண்டு மடங்காக அதிகரிப்பு

(கொழும்பு)

கடமை நேரத்தில் விபத்துக்குள்ளாகும் முப்படையினருக்கு வழங்கப்படும் நஷ்டஈடு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இராணுவ உத்தரவுகளின் புதிய திருத்தத்துக்கு ஏற்ப இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமை அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பாதுகாப்புப் பிரிவினர் காயங்கள் காரணமாக மரணமடைதல்பகுதியாகவோ முழுமையாகவே அங்கவீனமடைதல் போன்றவற்றுக்கு இந்த நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் இப் புதிய திருத்தம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கடமையிலிருக்கும் போது அல்லது கடமைக்கு செல்லும் போது, கடமையிலிருந்து திரும்பும் போது விபத்துக்குள்ளாகும் முப்படைவீரர்களுக்கு இந்தப் புதிய திட்டத்துக்கான நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது. (ர-8)

# பொலிஸ் காவலரண் அகற்றப்பட்டது

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரிக்கு முன்னால் பொலிஸாரினால் அமைக்கப்பட்டிருந்த காவலரண் இனந்தெரியாதவர்களினால் அகற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

காவலரண் அமைக்கப்படும் போது இப்பகுதியில் இருந்த மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இதே வீதியில் அமைக்கப்பட்டிருந்த காவலரண் ஒன்றும் ஏற்கனவே தாக்கி அழிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த செவ்வாய்க்கிழமை அழிக்கப்பட்ட இந்தக் காவலரணில் நீண்ட நாட்களாக பொலிஸார் கடமையில் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-4)

# நவோதயாப் பாடசாலை வாரம்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் நவோதயாப் பாடசாலை வாரம் நவோதயாப் பாடசாலைகளில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் இன்று வெள்ளிக்கிழமை நிறைவுபெறவுள்ளது.

நாட்டின் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் தலா ஒரு பாடசாலையைத் தெரிவுசெய்து சகல வளங்களையும் கொண்டதாக அபிவிருத்தி செய்வதற்காக "நவோதயாப் பாடசாலை அபிவிருத்தித் திட்டம்'' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் வடக்கு-கிழக்கில் 42 பாடசாலைகள் உட்பட நாடளாவிய ரீதியில் 314 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு நன்மை பெறவுள்ளன. (க-7)

# பேச்சுப் போட்டி

(வடமராட்சி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி மயில்வாகனம் சுவாமிகளின் 20 ஆவது குருபூசை தினத்தையொட்டி 6 ஆம்ஆண்டு முதல் 11ஆம் ஆண்டு வரை கற்கும் பாடசாலை மாணவர்களிடையே மூன்று பிரிவுகளாகப் பேச்சுப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

போட்டிகள் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடாத்தப்படும்.

போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு அடுத்த மாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் குருபூசைத் தினத்தில் பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு விண்ணப்பித்து போட்டிகள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (க-7)


கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி.

83ஆவது சர்வதேச கூட்டுறவு தினம்

4ஆம் நாள் (17.07.2005) நிகழ்வு

கூட்டுறவாளர் கௌரவிப்பு

முதன்மை விருந்தினர்

திரு. செ. கனகசபாபதி அவர்கள்.
கூ. அ. உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.

சிறப்பு விருந்தினர்கள்

திரு. சி. குமாரவேலு அவர்கள்.
தலைவர், யாழ். மா. கி. வங்கிகளின் சமாசம்.
திரு. ப. கனகலிங்கம் அவர்கள்.
தலைவர், யா. மா. வி. நு. கூ. ச. சமாசம்.

கௌரவம் பெறும் கூட்டுறவாளர்கள்

| | |
|---|---|
| திரு. த. கந்தசாமி அவர்கள். ஓய்வுபெற்ற கூ. அ. உ. ஆணையாளரும், சங்க முன்னாள் தலைவரும். | கட்டைவேலி கிளை. |
| திரு. சி. செல்லையா ஜே.பி. சங்க முன்னாள் உபதலைவர். | கோவிற்கடவை கிளை. |
| திரு. ஐ. சிவஞானம் அவர்கள். சங்க முன்னாள் உபதலைவர். | கரவெட்டி மேற்கு கிளை. |
| திரு. ஆ. சண்முகம் அவர்கள். சங்க முன்னாள் உபதலைவர். | நுகவில் கிளை. |
| திரு. வீ. நடராசா ஜே.பி. சங்க முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினர். | கரவெட்டி கிழக்கு கிளை. |
| திரு. சி.க. இராசேந்திரம் அவர்கள். சங்க முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினர். | வதிரி வடக்கு கிளை. |

தலைவர். (C/1480) செயலாளர்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை
எரிமுன்னர் வைத்தூறு போலக்கெடும்- குறள்

வலம்புரி

# யுத்தம் ஏற்பட்டால் அதனை நிறுத்துவது முடியாத காரியம்

யுத்தநிறுத்த உடன்படிக்கை என்பது சாதாரணமான ஒன்றல்ல. இருபது வருடகாலமாக நடைபெற்ற யுத்தத்தை நிறுத்துவதற்குப் பின்னால் இருக்கக்கூடிய சமாதான முயற்சிகள், விட்டுக்கொடுபுகள், அர்ப்பணிப்புகள் என்பனவற்றிற்கு மனித மொழிகளில் பெறுமதியிட முடியாது.

அவ்வாறு எத்தனையோ முயற்சிகளின் பயனாக ஐக்கிய தேசியமுன்னணி அரசும், விடுதலைப்புலிகளும் கைச்சாத்திட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை காப்பாற்றத்தவறினால் அதன் விளைவு யுத்தமாகவே இருக்கும்.

இவ்வகையில் திருகோணமலைப் பகுதியில் விடுதலைப்புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவமானது யுத்தநிறுத்த உடன்படிக்கையின் ஆயுளுக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிட்டது.

அரசும் விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் தமது அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும், அதற்கான அலுவலகங்களை இயக்குவதற்கும் அனுமதி உண்டு.

ஆயுதங்கள் இன்றி அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றால் அதன் பொருள் அவர்களுக்கான பாதுகாப்பை இராணுவத்தரப்பு வழங்கவேண்டும் என்பதாகும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடும் விடுதலைப்புலிகளுக்கு இராணுவத்தால் பாதுகாப்பு வழங்கமுடியாது என்றால், அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் ஆயுதங்களை வைத்திருப்பதற்கு விடுதலைப்புலிகளுக்கு அனுமதி அளிக்கவேண்டும்.

ஆயுதமும் வைத்திருக்க முடியாது, பாதுகாப்பும் வழங்க முடியாது எனக்கூறுவது யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு ஒவ்வானது அல்ல. யுத்தநிறுத்த உடன்படிக்கை செம்மையாக இருந்தால் மட்டுமே தற்போதைய தற்காலிக சமாதானத்தை யாவது மக்கள் அனுபவிக்கமுடியும்.

நாட்டில் தற்போது நிலவுகின்ற தற்காலிக சமாதானத்தின் அடிப்படை, யுத்தநிறுத்த உடன்படிக்கையாகும். இவ்விடயத்தில் அரசதரப்போ அல்லது விடுதலைப்புலிகளோ யுத்த நிறுத்த உடன்படிக்கையை காலாவதியாக்குவதெனில் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் அதனை வெளிப்படுத்த வேண்டும். இது உடன்படிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மேற்படி சரத்தின் பிரகாரம் அரசகட்டுப்பாட்டுப்பகுதிக்குள் விடுதலைப்புலிகளுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது எனில் அதுபற்றி அரசு முன்கூட்டியே விடுதலைப்புலிகளுக்கு அறிவித்திருக்கவேண்டும்.

இதனைச்செய்யாமல் விட்டுவிட்டு விடுதலைப் புலிகளுக்கான பாதுகாப்பிற்கு நாம் பொறுப்பல்ல என இராணுவத்தரப்பு கூறுவது யுத்தத்தை கைகூப்பிவரவேற்பதற்கு ஒப்பானதாகும்.

எதுவாயினும் மூன்று ஆண்டுகளாக நாட்டில் தற்காலிக சமாதானத்தை தந்துகொண்டிருக் கும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை காப்பாற்றுவதில்அரசு அர்ப்பணிப்போடு செயற்படவேண்டும். தவறினால் முடிபு பாரிய யுத்தமாக இருக்கும்.

யுத்தம் ஏற்பட்டதன் பின்னர் அதனை தடுக்கலாமென யாரேனும் நினைத்தால் அது மிகப் பெரும் தவறாகும்.

# இலங்கையின் அரசியலமைப்புக்கு பாதகமின்றி உலகவங்கிப் பிரதிநிதி செயற்படவேண்டும்

## -ஜே.வி.பி.பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச

உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் இலங்கையின் அரசியலமைப்பைப் பாதிக்காத வகையில் நடந்துகொள்ள வேண்டுமென்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு தொடர்நதும் உரையாற்றுகையில்; பொதுக்கட்டமைப்புக்கு எதிராக எமதுகட்சி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அதன்போது உலகவங்கியின் வதிவிடப்பிரதிநிதி நீதிமன்றில் கடிதம் ஒன்றினை சமர்ப்பித்தார்.

அதில் பொதுக்கட்டமைப்புக்கான நிதிகளை உலக வங்கியே கையாளும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அந்நிதிகையாள்கையின் அங்கீகாரத்தை இலங்கையின் அமைச்சரவை கொண்டிருக்கும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தாகக்கூறிய விமல் வீரவன்ச, இலங்கையின் நிதி கையாள்கையின் உரிமையினை பாராளுமன்றமே கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தமுடியும் என் அமைச்சர்களும, பிரதியமைச்சர்களும் தொிவித்து வந்தனர்.

ஐக்கியதேசியக்கட்சி நாட்டின் சட்டங்களை மீறிச் செயற்பட்டு வருகின்றது. ஜனாதிபதித் தேர்தலை வலியுறுத்தி அது பேரணியினை நடாத்தியமை சட்டத்தை மீறும் செயலாகும். இந்நிலையில் தேர்தல் ஆணையாளரே தேர்தல் ஒன்றினை அறிவிக்கும் உரிமையினைக் கொண்டவராவார்.

ஜே.வி.பி.அரசாங்கத்திலிருந்து விலகினாலும், அதனைப் பொருட்படுத்தாமல் ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பினைக் கைச்சாத்திட்டார். எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைக் கவிழ்க்க முயறசிக்கமாட்டார் என்ற உறுதிமொழியினை வெளிநாட்டுத் தூதரங்களின் ஊடாகப் பெற்றுக்கொண்டதன் பின்னரேயே ஜனாதிபதி குறித்த ஒப்பந்தத்தினை மேற்கொள்ளத் துணிந்தார்.

மத்தியில் சிறுபான்மை அரசாங்கமானாலும் மாகாண சபைகளில் சிறுபான்மை அரசாங்கமானாலும் ரணிலின் உறுதிமொழியின் அடிப்படையிலேயே ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்தி அதனை தற்சமயம் நடைமுறைப்படுத்தவும் முயற்சிக்கின்றார்.

அரசியலமைப்பின்படி தேர்தல் நடாத்தப்படும் காலத்தில் தேர்தல் ஆணையாளா தேர்தலை நடாத்துவார் இதனை சொக்ஸி ஏற்கனவே ரணிலுக்கு தெரிவித்திருப்பார்.

இந்தநிலையில் 2006ஆம் ஆண்டுதான் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பாராகவிருந்தால் ரணிலினால் அரசாங்கம் கவிழாமல் மலர் தூவிக்கொண்டிருக்க மாத்திரமே முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# லைசென்ஸ் கிடைக்காதவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்!

## யாழ்.மோட்டார் போ/வ திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் (லைசென்ஸ்) மற்றும் வாகன உரிமை மாற்றுப் புத்தகம் என்பவற்றுக்கு விண்ணப்பித்து நீண்ட காலமாகியும் இதுவரை அவை கிடைக்கப்பெறாதவர்களை யாழ்.செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொண்ட ஒழுங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரம். வாகன உடைமை மாற்றுப் புத்தகங்கள் பெறுவதற்கு கொழும்புக்கு அனுப்பப்பட்டும் நீண்டகாலமாக அது கிடைக்கப்படவில்லை என முறைப்பாடு முன் வைக்கப்பட்டது.

இதன் பிரகாரம் இவற்றைப் பெறுவதற்கு விண்ணப்பித்து இதுவரை கிடைக்கப்பெறாதவர்கள் உரிய அத்தாட்சிப் பத்திரங்களுடன் வேலை நாட்களில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார். (ற-19)

# யாழ்.மாநகரசபைப் பகுதி அபிவிருத்திக்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் நிதிஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

2005ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புனரமைபபு வேலைகளை மேற்கொள்வதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதாவது, பொன்னம்பலம் கொலனி பாசையூர் வீதி, புனரமைப்பதற்கு 150000 ரூபாவும், நாவாந்துறை சவக்காலைக்கு 50000ரூபாவும், ஆரியகுளம் கணனிப்பயிற்சிக் கல்லூரிக்கு 75000 ரூபாவும், யாழ்.வெஸ்கி சனசமூக நிலையத்திற்கு தையல் இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு 50000 ரூபாவும் குருநகர் கலாசார மண்டபத்திற்கு 25000 ரூபாவும்,

குருநகர் சனசமூக நிலையத்திற்கு 225000 ரூபாவும், குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையத்திற்கு 40000ரூபாவும், கிறீஸ் கிங்ஸ் சனசமூக நிலையத்திற்கு 50000ரூபாவும், கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலைய்திற்கு 80000 ரூபாவும், நாவாந்துறை சென்மேரிஸ் சனசமூக நிலையத்திற்கு 150000ரூபாவும், சென்மேரிஸ் கல்வி நிலையத்திற்கு 75000 ரூபாவும், நாவாந்துறை சென்நீக்கலஸ் கிறிஸ்தவ பாலர் பாடசாலைக்கு 100000 ரூபாவும், குரு நகர் **O.L.R** பாலர் பாடசாலைக்கு 25000ரூபாவும் கொட்டடி மீனாட்சி கிராமிய மாதர் அபிவிருத்தி சங்கத்திற்கு 30000 ரூபாவும்.

பாசையூர் சனசமூக நிலையத்திற்கு 50000 ரூபாவும், சூரியவெளி கொலனிக்கு நீர் விநியோகம் மேற்கொள்வதற்கு 50000 ரூபாவும், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திற்கு குடிதண்ணீர் வசதிக்காக 30000ரூபாவும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திற்கு 35000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ற-19)

# இலங்கை ஆசிரிய சேவைச்சங்கம் கல்வி அமைச்சின் முன் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து இலங்கை ஆசிரிய சேவை சங்கம் கல்வி அமைச்சின் முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளது.

சுகவீன லீவில் வேலைக்குச் சமுகம் அளிக்காத இலங்கை ஆசிரிய சேவை சங்கத்தின் உறுப்பினர்களே இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

2004,2005ஆம் ஆண்டு சுற்றுநிருபங்களின்படி பதவி உயர்வு தொடர்பான சம்பள நிலுவைகள் தமக்கு வழங்கப்படவில்லையென ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஆசிரிய சேவையில் பட்டதாரிகளுக்கு இல்லாமல்போன இடங்களை மீண்டும் பெற்றுத்தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தமது இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளுடன் பலமுறை பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் எந்த முடிவும் எமக்கு தரவில்லையென சங்கத்தில் பிரதான செயலாளர் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அங்கு வருகைதந்த கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எல்.எல்.குணவர்த்தன இலங்கை ஆசிரியசேவை சங்கத்தின் கோரிக்கை மனுவை பெற்றுக்கொண்டார்.

சங்கத்தினால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளைப் பெற்றுத் தருவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருவதாக எல.எல்.குணவர்த்தன தெரிவித்தார். (ற-8)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஓங்க அடிப்பது எளிது ஆனால் அடிக்காமல் அடங்கி இருப்பது மிகக் கடினமானது "இறைவா! உம்மிடமே தஞ்சம் அடைகிறேன்" என்று கூறி விட்டு அவன் செயலை எதிர்பார்த்துக் காத்திருப்பது அதைவிடக் கடினமானது.

சுவாமி விவேகானந்தர்

## விபத்தில் போராளி சாவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

மேஜர் தவக்குமாரி (தங்கவேலு பவானி,தாளையடி யாழ்ப்பாணம்) என்ற போராளியே சாவடைந்தவராவார். (ச)

## க.பொ.த சாதாரண பரீட்சை விண்ணப்பத் திகதி நீடிப்பு

(புங்குடுதீவு)

கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சைக்கான விண்ணப்பத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

தாமதக்கட்டணத்துடன் இம்மாதம் 30திகதி வரை விண்ணப்பிக்க முடியும். தாமதக் கட்டணங்களின் அறவீடு குறித்து சகல தபால் திணைக்களங்களுக்கும் சுற்றறிக்கைமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு பாடங்களுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு தாமதக்கட்டணம் 15ரூபாவாகவும் மூன்று, நான்கு பாடங்களுக்கு விண்ணப்பிப்போருக்கு 20ரூபாவும் 5பாடத்திற்கு 30 ரூபாவும் 6 பாடத்திற்குமேல் 35 ரூபாயுமாக தாமதக்கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ச-126)

# கிளிநொச்சியில் தொலைபேசி சேவை நேற்று பிற்பகல் முதல் செயலிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கும் வெளிஇடங்களிற்கும் இடையிலான தொலைபேசிதொடர்புகள் நேற்று பிற்பகல் முதல் செயலிழந்துள்ளன.

இதன்காரணமாக அப்பிரதேசத்திற்கும் வெளிமாவட்டங்களிற்குமிடையிலான தொலைபேசித் தொடர்புகள் தடைப்பட்டுள்ளன.

இதேவேளை கிளிநொச்சியில் உள்ள தொலைபேசி கோபுரத்தில் ஏற்பட்டுள்ள தொழிநுட்பக்கோளாறு காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக சிறிலங்கா ரெலிக்கொமின் வடக்கு கிழக்கு பிராந்திய முகாமையாளர் அ.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

தற்போது அப்பகுதியில் கடும் மழைபெய்கின்றது. இதன் காரணமாக ஊழியர்கள் கோபுரத்திற்கு மேல்ஏறி திருத்தப்பணிகளை மேற்கொள்ள முடியாது உள்ளது. இன்று திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தொலைபேசி சேவைகள் வழமைக்குத்திரும்பும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு தமது பாதுகாப்புத்தொடர்பாக விடுதலைப்புலிகள் வழங்கிய கால அவகாசம் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொள்ளவிருக்கும் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவென சர்வதேச ஊடகவியலாளர்களும் உள்நாட்டு ஊடகவியலாளர்களும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற சூழலில் தொலைபேசி சேவை செயலிழந்துள்ளமையானது சர்வதேச ஊடகவியலாளர்கள் மத்தியில் கடும்விசனத்தை ஏற்படுத்தியுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-4)

## பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட பட்டதாரிகளுக்கான அவசரமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10மணிக்கு யாழ்ப்பாண ஆரியகுளம், புதிய உயர்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பட்டதாரிகள் நியமனம் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் சகலபட்டதாரிகளையும் அன்றையதினம் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட பட்டதாரிகள் பயிலுநர் சங்கச்செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

## புலிகளுக்கு ...

இருக்கின்றது. ஆனால் விடுதலைப்புலிகள் குறிப்பிட்டபடி அவர்கள் முன்வைத்த எல்லா வழிமுறைகளிலும் அவற்றினை வழங்க முடியாது.

இவ்விடயத்தில்தான் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் முழுமையான பாதுகாப்பினை அவர்களுக்கு வழங்க அரசு தயராக இருப்பதோடு அவ்வுறுதி விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆனாலும் எவ்வளவுதான் பாதுகாப்பு நடைமுறைகள் நடைமுறைபடுத்தப்பட்டாலும் எமக்கு அப்பால்பட்ட சில விடயங்கள் இருக்கின்றன என்பதுதான் உண்மை என அவர் கூறினார்.

மூன்று வருடகாலமாக அமுலில் இருக்கும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து பேணுவதில் அரச தரப்பு உறுதியாக இருக்கின்றது. ஆனால் ஆயுதக்குழுவினரே நிலைமையை பதற்றமடையச் செய்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் முதல் 30 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலவேறு தாக்குதலில் படுகாயமடைந்துள்ளனர் என்பதை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருகோணமலையில் தொடர்சியாக இடம்பெற்றுவரும் சம்பவங்களுக்குப் பின்னால் சில அடிப்படைவாதிகள் இருக்கின்றனர். சம்பவங்களில் இடம்பெறக்காரணமாக இருந்தவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.சமாதானம் என்பது இலகுவில் அடைந்து விடக்கூடியதல்ல அதற்காக பாரிய சிரமங்கள் எதிர்கொள்ள வேண்டியது யதார்த்தமானது. இந்தநிலையில் அரசாங்கம் பிரச்சினைகளைத் தீர்க்க தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.(ச-4)

# திருகோணமலையில் பாதுகாப்புக்கென இராணுவத்தினரை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

திருகோணமலையில் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருக்கும் படையினரின் அளவு போதுமானதானதாக இல்லை என கிழக்கு பிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் றொகான் அபயவர்த்த தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கு மேலதிக படையினர் பொலிஸாரைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

திருகோணமலையில் தற்போது இடம்பெற்றுவரும் சம்பவங்களினால் அங்கு நிலவும் பதற்றத்தை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு படையினர் மற்றும் பொலிஸாரின் தொகையை அதிகரிக்க வேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

விசேடமாக திருகோணமலையில் இருந்து ஹபரணவரையிலான பிரதான வீதிகளிடையில் கந்தளாயில் இருந்து ஹபரண வரையுள்ள இப்பகுதிகளிலே பாதுகாப்புப்பலப்படுத்தப்பட்டுள்ளது.

மற்றும் வீதி ரோந்து நடவடிக்கைகள் காவலரண்களில் படையினர் எண்ணிக்கையை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு பொலிஸாரும் படையினரும் மேலதிகமாக தேவைப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-8)

# இந்து மாநாடு இன்று ஆரம்பம்

அகில இலங்கை இந்துமா மன்ற பொன்விழாவை ஒட்டி நடாத்தப்படும் இந்துமாநாடு யாழ்.தேசியகல்வியியற் கல்லூரியில் இன்று ஆரம்பமாகிறது.

இந்துமா மன்றமும் யாழ்தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடாத்தும் இம்மாநாடு மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

நிகழ்வுகள் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.அகில இலங்கை இந்துமா மன்றத்தலைவர் வி.கைலாசபிள்ளையின் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் ஆசியுரையினை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,இந்து மத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்த மஹராஜ்யும், தொடக்க உரையினை சிவத்தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும் நிகழ்த்துவார். (ச-2,8)

# மீளக்குடியமர்த்தக் கோரி இன்று பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியமர்வுக்கு அனுமதி கோரி யாழ்ப்பாணத்தில் இன்று பாதயாத்திரை ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுளளது. மருதானார் மடம் சந்தியில் உள்ள ஆஞ்சநேயர் ஆலய வளவில் இருந்து ஆரம்பமாகி அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வரையில் இப்பாத யாத்திரை நடத்தப்படவுள்ளது.

இடம்பெயர்ந்த நலன்புரி அமைப்புக்களின் ஒன்றியம் அதனை ஒழுங்கு செய்திருந்தது. மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் தற்சமயம் உற்சவம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச-4)

## திருகோணமலையில்...

ஊடகப்பேச்சாளர் தயாமாஸ்ரருடன் தொடர்பு கொண்டபோதும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

இதேவேளை இந்த சம்பவத்தையடுத்து கும்புறுப்பிட்டிப் பகுதி மக்கள்இடம்பெயர்ந்து தேவாலயம் ஒன்றில் தஞ்சமடைந்துள்ளனர். அதேபோன்று விபுலானந்தபுரப்பகுதி மக்கள் இடம் பெயர முடியாதபடி கடற்படையினர் அவ்விடத்தை சுற்றிவளைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இது இவ்வாறிருக்க இப்பகுதியைச் சேர்ந்த கந்தையா ராசன் மற்றும் தங்கராசா கேதீஸ்வரன் ஆகியோர் காணாமல் போயுள்ளதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.3ம் கட்டைப்பகுதி மக்களும் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளதாகவும் நிலாவெளி மற்றும் கோபாலபுரப் பகுதி படைத்தளங்களிற்கு அண்மையாக வசித்த மக்களும் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்கு நகர்ந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேள்ள திருமலை மாவட்டத்தில் மக்கள் மிகவும் பீதியடைந்த நிலையில் காணப்படுவதாக் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை கடந்த இருதினங்களாக தொடர்ந்து இடம் பெற்றுவரும்தாக்குதல் சம்பவங்களையடுத்து, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் பாதுகாப்பு அவசர அவசரமாக பலப்படுத்தும் நடவடிக்கைகளில் படைத் தரப்பு முழுவீச்சுடன் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் ஒரு கட்டமாக நேற்று பிற்பகலிலிருந்து, பொலநறுவை, அனுராதபுரம், குருணாகல் ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றி வரும் பொலிஸார் மேலதிகமாக அப்பகுதிகளில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இராணுவத்தினரும் உசார் படுத்தப்பட்டு ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக தெரியவருகிறது.

இதேவேளை விடுதலைப்புலிகளினால் விதிக்கப்பட்ட 14நாள் காலக்கெடு முடிவடைவதற்கு முன்னர் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற முதலாவது நேரடிமோதல்சம்பவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ச-4,8)

## செல்வநாயகபுர...

எடுத்து சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்து சட்டத்தையும் ஒழுங்கையும் சமாதான் முறையில் நடைமுறைப்படுத்துமாறு பணித்திருப்பதாகவும் ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டினை உரிய முறையில் அனைத்துத்தரப்பினரும் கடைப்பிடிக்கவேண்டும்.

உடனடியாக திருமலைச்சம்பவம் தொடர்பாக புலன் விசாரணைகளைக் மேற்கொண்டு வன்முறைகளுக்குஎதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதுகாப்புப் படையினருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தற்போது நிலவுகின்ற அரசியல் முரண்பாடுகள், வன்முறைகள் என்பவற்றை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கமுடியும் எனத்தெரிவித்துள்ள ஜனாதிபதி இருதரப்பினராலும் கையொப்பமிடப்பட்ட ஆழிப்பேரலை நிவாரணசபை குறித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்த நடைமுறைகளை இவ்வன்முறைகள் சீர்குலைத்துவிடுமென கவலை வெளியிட்டார்.

இதனைக் கருத்திற்கொண்டு மீண்டுமொரு சுமுகநிலையினை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென அவர்மேலும் தெரிவித்துள்ளார். (ச-8,4)

## பொலிஸ்...

இச்சம்பவத்தை அடுத்து அப்பிரதேசத்தில் தீவிரதேடுதல் நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டனர். (ச-4,2)


## நியூ சிற்றி றேடேர்ஸ்

எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவித மான றேடியோக்களும் மற்றும் கிறைண்டர்கள், மணிக்கூடுகள், மின்சார உபகர ணங்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

மேல்மாடி இல. 135/1 கஸ்தூரியார் வீதி,
(குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226

(C-அ-1348)



## பதவி வெற்றிடம்

* கணணி பக்க அமைப்பாளர்கள் (ஆண்கள் இரவுக்கடமை)
* பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (பெண்கள் பகல் கடமை)

வலம்புரி நிறுவனத்திற்கு கேிலோமீற்றர் தூரத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டும் பிற்பகல் 3.30மணிக்கு சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில்வரவும்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.



## மனோகரா
யாழ்ப்பாணம்

ஷங்கரின் இயக்கத்தில்



சியான் விக்ரம்.சதா. விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்


அந்நியன்

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

இசை: ஹரீஸ் ஜெயராஜ்



## நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது | யாழ்.






## நிறைஞ்சனாஸ் சினிமா
சங்கானை

அஜித், தேவயானி, நடித்த

காதல் கோட்டை

காட்சி நேரம்: 11.00, 2.45
06.00 (பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.